ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மலை 1.	ஈரோடு, ஸ்ரீமுக-வரு மாசி-மீ 21-உ (4—3—1934)	மலர் 15.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணா 3.

நான் சம்சய வாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார்.

விலை அணா 3.

விலாசம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.



இதுதானே தேவை?

போகப் பிரியர்களுக்கு

தாதுபுஷ்டியை அளிக்கக்கூடிய

மன்மதக் குளிகை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதைத்திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்?

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக் குறைவு, வீரியக் குறைவு, சுரம்புத்தளர்ச்சி, கோசத் தவளல், இளைப்பு, தாகம் முதலிய வைகளை நீக்கி வீரியவிருத்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைக் கொடுக்கும்.

60-குளிகை ரூ. 5. 20-குளிகை ரூ. 2. வி. பி. வேறு.

குருதாம்பர பஸ்பம்.

திமிர், சூஷ்டம், மதமதப்பு, பவுத்திரம், தடிப்பு, ரணம், குன்மம் முதலிய சகல வியாதியும் தீரும்.

25-நாள் பஸ்பம் ரூ. 12—8—0.

அன்னியநாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி சட்டிகள், வலி குன்மம், இரத்தி, குஷ்டம், விங்கப்புற்று, சூலை தணுச்சூலை, பாரிச வாய்வு, மூட்டுவாய்வு, சரீரத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, உதடுதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆர்த்த ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பல்வித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு கல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வ. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு ஆசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந்நூல்கள்:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை ...	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணி செய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ் நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்டல் அல்லது காட்டுப்பாடல் ...	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணிபார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வெளியீட்டுக்காக நம்மிடம் உள்ள

புதிய பதிப்புப் புஸ்தகங்கள்.

1. சித்தம்பர ரகசியம் ... 0—8—0
2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
4. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை 0—6—0
5. மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... 2—0—0
8. ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... 0—6—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமகவின அடிமைகள் ... 0—12—0
செல்வ லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றபடியால் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களினின்று தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் ரூ. 4—0—0

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

The First Socialist Conference of South India.

தமிழ்மாகாண முதலாவது சமதர்ம மகாநாடு.

தலைவர் தோழர்

ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.

அவர்களின் உபந்யாசம்.

மன்னார்குடி 3, 4—3—1934.

தோழர்களே!

சமதர்மத்தை, சோஷலிசம் (Socialism) என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும். இந்த ஆங்கிலச்சொல், உலக முழுமையும் அறிந்த சொல்லாகும். மேல் நாட்டு பாஷைகளில் சோஷலிசம் [Socialism] என்றால் ஒவ்வொரு வரும் இன்ன விஷயத்தைப் பற்றியது என்று தெரிந்து கொள்வார்கள். ஐரோப்பிய முக்கிய பாஷைகளாகிய பிரென்ச் (French) ஜெர்மன் (German) இட்டலி [Italy] ரஷ்யன் [Russian] முதலிய பாஷைகளில், சோஷலிசம் என்ற சொல்லின் இறுதிபாகம் கிஞ்சித்து மாறுபட்டு இருப்பதே தவிர, பதத்தின் உச்சரிப்பு, ஐரோப்பிய பாஷைகளில் ஒன்றுயிருக்கும் சோஷலிசம் என்ற சொல்லை உச்சரித்தவுடன், எந்த சமூக வாதிகளாயினும் அரசியல் வாதிகளாயினும் எந்த தத்துவ வாதிகளாயினும் அறிந்து கொள்வார்கள். இந்த சொல்லில் அடங்கிய கருத்தை உணர்ந்து அங்கீகரித்தவர்கள், சோஷலிஸ்ட் அதாவது சமதர்மிகள் என்று வழங்கப் படுவார்கள்.

சமதர்ம சொல்லின் விளக்கம்.

ஆனால் சமதர்மமென்ற சொல்லில் நமது தமிழ் நாட்டில் ஒன்றில் தான் சோஷலிசத்தின் கருத்தை அடங்கச் செய்துள்ளோம்: சமதர்ம மென்றால், சமத்துவ பொறுப்பு என்று வடமொழியிலுள்ள கருத்து. சமம் சரி, தர்மம்-கடமை (Duty) இதுதான் அதன் யதார்த்தப்பொருள். இந்திய பிரபல நூலாகிய பகவத் கீதையில், அவனவன் ஜாதித்தொழிலே புரிவதை சமதர்ம மென்று வழங்கப்பட்டு வருகிறது. பாலி பாஷையில் அதாவது புத்தர் பேசிய பாஷையில் தர்மம் என்ற சொல்லிற்கு தர்மம் என்றால் வஸ்து என்ற ஓர் கருத்தும் இருந்தது. இச் கருத்தை உள்ளடக்கி சமம்சரி அல்லது பொது, தர்மம் வஸ்து என்று கூட்டி, சமதர்ம மென்றால் பொது சொத்து அல்லது பொதுவுடமை என்று பொருள் பட, சமதர்ம சொல்லைக் கொண்டு, நமது சங்கங்களை அழைத்து வருகின்றோம். இந்த அர்த்தத்தைக் குறிக்க, சமதர்ம மென்ற சொல்லை முதலில் உபயோகித்தோம். சமதர்மம் என்ற சொல்லிற்கு நமது கருத்தின்படி யதார்த்தப் பொருள் என்னவெனில், சமத்துவ சொத்து அல்லது உடமையைப்பற்றிய சித்தாந்தமாகும்.

இந்த அர்த்தத்திலுள்ள கஷ்டம். சமத்துவப் பொருளைக் குறிக்க சமதர்ம மென்ற சொல்லை நாம் உபயோகித்து வந்த போதிலும், உலகத்தில் உபயோகப்பட்டு வரும் சோஷலிசம் என்ற சொல்லிலடங்கிய விஷயங்கள் பல வேறு உள்ளன. சோஷலிசம் என்றால், சமத்துவ பொருளை அதாவது சொத்தை படைத்திருப்பது மாத்திரமல்ல [Common Ownership.] அந்த சொத்துகளின் உபயோகமும், அதாவது, விநியோகமும் Equal distribution அடங்கியுள்ளன. இந்த கருத்துகளுடன் சொத்துகளின் பயனும் (Profit) எதாகிலும் இருக்குமானால், அவை அனைத்தும் பொது உபயோகத்திற்கு (Common use) உட்படுத்தப் படும். இந்த சொத்துக்களை பரிபாலிக்கும் படியான ஸ்தாபனங்களும் உண்மையான ஜனநாயக ஆட்சியில் Democratic Control வர வேண்டும். இந்த நான்கு கருத்துகளுடன் இன்னொரு முக்கிய கருத்து முண்டு. அதாவது இந்த சோஷியலிஸ்டு ஆட்சி உழைப்பவன் (Worker) உரியது. அதாவது உலகப்பொருளை செய்பவனும், விளைவிக்கின்றவனும் மாத்திரந்தான் அனுபவிக்க பாத்திரனுவான். இவ்வை ந்துகருத்துகளையும், விளக்குவோம். அவையாவன:—

(1) பொது சொத்துரிமை (Common Ownership)

(2) சமத்துவ விநியோகம் (Common Distribution)

[3] சமத்துவ லாப உரிமை (Common use of Profit)

[4] ஜனநாயக ஆட்சி (Democratic Control.)

(5) உழைப்பவனுடைய ஆட்சி (Workers'rule)

இவ்வைந்து விஷயங்களும், சோஷலிசம் என்ற சொல்லிற்கு உரியனவாகும். இவ்வைந்து விஷயங்களையும் நாம் உபயோகப்படுத்தி வரும் சமதர்ம மென்ற சொல்லில் அடங்கவைத்தாலொழிய, உலகம் அறிந்து சொல்லிலுள்ள சங்கேத விபரீதங்கள் இல்லாமற் போகும். உலகில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் எல்லோரும் சோஷலிசத்தை எளிதில் தெரிந்து கொள்வார்கள். உலக முழுமையும் நமது சங்கத்தின் கருத்துகளை உடனே உணர்ந்து கொள்வார்கள். சோஷலிசம் என்ற சொல் அகில தேச சொல்லாகி விட்டது. [International word] இந்த சொல்லை தமிழ்பாஷையிலும்உபயோகித்து வருவோமாயின் தமிழ்பாஷையில் இல்லாத அனந்தம் புதிய கருத்துக்கள் நமது தமிழ்நாட்டில் நிரம்பும் தமிழ்பாஷையும் அபிவிருத்தியடையும். சாதாரணமாக தமிழ்பாஷையில் அனந்த பிரதேச சொற்களை (Foreign Words) உபயோகித்து வருகின்றோம். கவர்மெண்டு, கலெக்டர், ஸ்டேஷன், ஜெயில், டிக்சட், கொரோனின், ஸ்டீமர், ஹார்பர், கோர்ட் ஹவுஸ், கோர்ட், லாயர், பாரிஸ்டர், இங்க், பேப்பர், பென்சில், பண்டு, பாங்க், செக். போலீஸ், இன்ஸ்பெக்டர், சூப்பிரன்டெண்டென்ட் டைம், பைர்பாக்ஸ் இன்னும் பல அகிலதேச சொற்களை சாதாரணமாக தமிழ்நாட்டில் உபயோகப் படுத்திக்கொண்டு வருகின்றோம். இவ்விதமாக சோஷலிசமென்ற சொல்லை நமது சங்கங்கள் மூலமாக பழக்கத்தில் கொண்டு வருவோமாயின், தமிழ்பாஷை அபிவிருத்தியடைவதோடு, சோஷலிசத்தில் அடங்கிய கருத்து தமிழ்நாட்டில் எளிதில் பரவுமென்பதற்கு சந்தேகமில்லை. இந்த அபிப்பிராயங்களை ஊன்றி ஆலோசிக்கும் படியாக கேட்டுக் கொள்கின்றேன்.

The Necessity For Socialist Leagues.

சமதர்ம சங்கங்களின் அவசியம்.

நமது நாட்டில் பல்வேறு விஷயங்களுக்காக, பல்வேறு சமூகஸ்தாபனங்கள் தோன்றியுள்ளன. மதஸ்தாபனங்களென்றும்லோகஸ்தாபனங்களென்றும் நம் நாட்டில்பல நிறைந்துள்ளன.கோயில்குளங்களைகட்டுவதற்கும், மூடநம்பிக்கைகளை ஆதரித்து வளர்ப்பதற்கும், அனந்தமாயிரம் விவேகிகள் என்று கூறப்படும் மக்கள் உழைத்து வருகின்றனர். ஜாதி சமயங்களை வளர்ப்பதற்கும், நாட்டின் ஒற்றுமையைக் கெடுப்பதற்கும், அநேக தனவந்தர்கள் பாடுபட்டு வருகின்றனர். ராஜாங்கத்தில், பட்டம் பதவிக்கும், உழைத்தவரும் கல்வி கேள்வி நிறைந்த மக்கள் பல்லாயிரம் பேரைக்காணலாம். நாட்டின் செல்வம் சிலரிடத்தே குவிய, பாங்குகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் லக்ஷக்கணக்காக நா

டெங்கும் நிறைந்துள. சொத்து உடையோரும் அவர்களைப்பார்த்து மற்றமுள்ள ஏழைஜனங்களும் கெட்டுவர கோர்ட்டுகள்பல, நாடுமுழுமையும் ஸ்தாபிக்கப்பட்டுள. இத்யாதில் ஸ்தாபனங்கள் யாவும் தூற்றில் இரண்டொருவருடைய நன்மைக்கும் தின்மைக்கும் ஏற்பட்டுள்ளன. ஆனால் 100-ல் 98 பேருடைய சுகதுக்கங்களைக் குறித்து பாடுபடுபவர்கள் எவருமில்லை, எத்தஸ்தாபனங்களும்மில்லை கோடானுகோடிமக்கள் வயிரார உண்ணுகின்றார்களா? கபலையற்று உழைத்து உறங்குகின்றார்களா? அவர்கள் பிள்ளைகுட்டிகளைச் சித்துவாழுகின்றார்களா? ஞானத்தை பெறுகின்றார்களா? இவர்களுக்கு சுகாதார வீடுதிகள் அமைக்கப்பட்டுள்ளனவா? எல்லோரும் தொழில் புரிந்து ஜீவிக்க வசதிகள் ஏற்பட்டுள்ளனவா? உயர்தர வாழ்விற்கு வேண்டிய வசதிகள் அமைக்கபட்டுள்ளனவா? நாட்டில் வறுமையைப் போக்கும் வழிகள் எற்படுத்தப்பட்டு வருகின்றனவா? பொதுமக்கள் உண்மையில் அரசியல் உடவுரிமைகளில் ஆதிக்கம் அடைந்து வருகின்றார்களா? நாட்டு தொழிலாளர்கள் தாங்கள் புரிந்துவரும் தொழிலில் எத்தவித பாதுகாப்பாவது அடைந்து வருகின்றார்களா? நிலமும் நீரும் சரிசமத்துவமாக நாட்டுமக்கள் யாவருக்கும் உபயோகப்பட்டு வருகின்றனவா? செய்பொருளும் வீலைபொருளும், தனக்களும், தானியங்களும், நாட்டு மக்களெல்லாம்சமத்துவவிலையோகம் அடைந்துவருகின்றனரா? இவ்வித உயர்வாழ்விற்கு வேண்டிய முக்கிய விஷயங்களில் முக்கியமாக பாடுபடும் சங்கங்கள் ஒன்றேனும் இல்லை. எகதேசமாக எங்கோ ஓர்மூலைகளில் பருத்தித்துணி சங்கமென்றும், ஜாதியதங்களை கண்டிக்கும் சுயமரியாதை சங்கமும், 'ஆம்னிபஸ்' வீஷயக்களை அதாவது பல்வேறு பட்ட பல கோடிவிஷயங்களைப்பற்றி பேசும் சில சமதர்ம சங்கங்களும் தோன்றியுள்ளன. பூர்ண வாழ்வைக்குறித்து பேசும் சங்கங்கள் ஒன்றேனும் இல்லை. இந்த குறைகளைப் போக்குவதற்குத்தான் சோஷ்லிஸ்டுலீகுகளை (Soclist League) சமதர்ம சங்கங்களை நாடுமுழுதும் ஸ்தாபிக்க வேண்டும்.

What For Socialism?
சோஷலிசம் எதற்கு?

நமது நாட்டில் வீலையும் பொன்னெனினி நாணயங்கள் பாங்குகளிலும், சில மாளிகைகளிலும் நிறைந்து கிடக்கின்றன. வீலையும் தானியங்கள் அம்பாரங்களில் போர்போட்டு இருக்கின்றன. நமது நாட்டு மக்களுக்கு வேண்டிய ஆடைகள் ஷாப்புகளில் நிறைந்திருக்கின்றன. நமது நாட்டில் வசிக்கும் 7 கோடி குடும்பங்கள் தங்கி வாழவேண்டிய வீடுகளுக்கு வேண்டிய கற்களும் மரங்களும் நாடுமுழுமையும் அடர்ந்து கிடக்கின்றன. இவ்விதமாக நமது நாடு எல்லாசியமாக இருந்தும், நாட்டின் மக்களுடைய வாழ்வின் நிலைமையைக் குறித்து எழுதுகின்றவர்கள், என்ன சொல்லுகின்றார்களென்பதை சற்று நோக்குவாம். நமது பக்கத்து வீட்டுக்காரருடைய நிலைமை நமக்கு நன்றாகதெரிந்திருந்தும், நாம் எடுத்துச்சொன்னால், நாம் சொல்வதை நம்பமாட்டார்கள். இவ்விதமனப்பான்மையை திருப்தி செய்வதற்குத்தான், அயல்நாட்டு மக்களின் அபிப்பிராயங்களை இங்கு எழுதத் துணிந்தோம். சென்ற இரண்டொரு வருஷத்திற்குள், இரண்டு சிறுபுஸ்தகங்கள் இரு ஆங்கில பிரபலஸ்தர்களால் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. அவையாவன நோயல் பிரைல்ஸ்போர்டு என்பவரால் எழுதப்பட்ட, 'ரெபல் இந்தியா' என்ற நூல் ஒன்று. இண்டியன் கிரிஸ், பென்னர் பிராக்வே என்பவரால் எழுதப்பட்ட நூல் மற்றொன்று. கைத்தொழில் புரியும் உழைப்பாளிகளுடைய நிலைமையைக் குறித்து விட்லிகமிஷன் ஒன்று 1930-31 வருஷத்தில் ஓர் ரிப்போர்டை பிரசுரித்திருக்கின்றனர். இவைகளன்னியில், 20, 25, வருஷத்திற்குமுன், நமது நாட்டின் நிலைமையைக் குறித்து எழுதியவர்கள் சிலர் உண்டு. தாதாபாய் நௌரோஜி, லாலா லஜபதிராய், பெசண்ட் அம்மை இன்னும் சிலர் நமது நாட்டைக் குறித்து சிலதூல்களை இயற்றியுள்ளார். அவைகளை, பண்டைகால தூலென்று சூறுவர். ஆனால் அத்த தூல்கள் நமது நாட்டு பொருளாதார நிலைமையைக் குறித்துப் பேசும் தூல்களில் முதன்மை யானவை. (They have become classic in the econa. mic literature of the Country) இந்திய ஜனத்தொகை Indian Population என்றதூல் ஒன்று பிரிட்ஜ் நாராயணன் என்பவரால் எழுதப்பட்டிருக்கிறது (The Peasantry in India) என்ற நூலும் விவசாயிகளுடைய நிலைமையை விஸ்தரிக்கின்றது. டட் [Dutt] என்பவரால் Modern India என்ற ஓர் சிறு நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனல் இத்தூல்கள், இந்தியர்களால் எழுதப்பட்டமையால், பாரபக்ஷமுள்ள (Impartial) தூல்களென்று மதிக்கமாட்டார்கள். நமது நாட்டு நிலைமையை நாம்சொன்னலும் கேட்கமாட்டார்கள். ஆதலால்தான் சென்ற இரண்டொரு வருஷத்திற்குள் இரண்டு ஆங்கில பொதுஜன தூலின் (Publicist) கர்த்தர்களால் எழுதப்பட்ட இரண்டு மூன்று தூல்களை நாம் சொல்லுவதற்கு ஆதாரமாகக் கொண்டுள்ளோம். அத்தூல்களின் கருத்து பின்வருமாறு:—

நமது நாட்டு 35-கோடி மக்களுக்கு, போதுமான உணவும், உடுக்க ஆடையும், தங்க வீடும் இல்லை. 100-ல் 40-பேருக்கு ஒரு வேளைக்கு வேண்டிய அன்னம் கிடைக்கவில்லை. நமது நாட்டு மரணவிகிதம் மற்றநாடுகளைவிட அதிகம், வயதும் அதிகக் குறைவு, பிறக்கும் பிள்ளைகளில் 100-க்கு 30-வீதம் பிறந்த ஒரு வருஷத்திற்குள் இறக்கின்றன, 1000க்கு 30-விகிதம் இந்தியமக்கள் இறந்து விடுகின்றார்கள். இந்தியமக்களுக்கு சராசரி வயது 27, ஆனல் ஆங்கில நாட்டில் பிறக்கும் 100 குழைந்தைகளில் ஒரு வருஷத்திற்குள் இறக்கும் குழைந்தைகள் 9, முதியோர் மரண விகிதம் 1000-க்கு 11, சராசரி வயது 53.

கல்வி நிலைமை.

தேசபாஷைகளைக்கற்று எழுதுவோர் 100-க்கு 8, ஆனல் ஆங்கில நாட்டில் 100-க்கு 78-பேர் ஆங்கிலத்தைப் படித்து எழுதுகின்றார்கள். உயர்தர கல்வி அடைந்தோர் நமது நாட்டில் 'டெசமல் பாயிண்ட்'. ஆனல் மேல் நாட்டில் 100-க்கு 30.

சுகாதாரம்.

இந்திய நகரங்களின் முக்கால்வாசி மக்களுக்கு வாழ போதுமான இடம் கிடைப்பதில்லை. ஒரு பங்களாவைச் சுற்றி 9 குடிசைகள் இருக்கிறன. இரண்டொருவர்கள் வசிக்கும் மாளிகையின் அநுகாமையில், ஒவ்வொரு சிறு வீட்டிலும் 40, 50 பேர் வாழும் பல்லாயிரம் சிறு வீடுகளும் உண்டு. கிராமங்களில், வாசலேயும், சாக்கடையையும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுத்துவது கஷ்டமாயிருக்கிறது கிராமங்களில், ஜலவசதியும் கிடையாது. கிராமப் பிள்ளைகளுக்கு வேண்டிய பள்ளிக்கூடங்களுமில்லை. நாட்டுப்புறங்களின் வாழ்வைப்பார்த்தவர்களுக்குத்தான் வாழ்வின் அதிகார நிலைமை (The autrocious and the in-hunan life that is generally lived in Indian villages will be transparent) வெளியாகும். எதன் மத்தியில் இந்த அகோர வாழ்வு நிறைந்திருப்பதாக எண்ணுகின்றீர்கள்! காலேயிலும் மாலேயிலும் அனந்தமாயிரம் கோவில்களிலிருந்தும் கண்டாமணி ஓசை கேட்கின்றன. அனந்தகோடி மூடமக்கள் ஹரஹரா என்று தங்கள் ஓசையை வானத்தை நோக்கி சப்தமிடுகின்றனர். பல்லாயிரம் மாசா கோயில்களிலிருந்து பல லக்ஷமக்கள் அடையமுடியாத அருளைப்பெற கோடிக்கணக்கான மக்கள் லிட்டனீஸ் (Litanies) பாடுகின்றனர். மதவைராக்கியமுள்ள முகமதியன், மெக்காவை நோக்கி "அல்லாஹ் அக்பர்" என்ற இறைச்சலேஇடுகின்றான். ஆனல் இந்த கண்டாமணியும், இந்த ஹரஹரா ஓசையும், இந்தசர்ச்லிட்டனிஸ்களும் அல்லாஹ் அக்பர் இறைச்சலும் கேட்கவேண்டிய கடவுள் கற்பித சொல்லென்று அறியார். இவர்களை வாட்டிவதைக்கும் பஞ்சம் குறைந்த பாடில்லை. லக்ஷக்கணக்கான மக்களை ஒரு கூஷ்பொழுதில் கொன்றுவிடும். விஷநோய்கள் குறையவில்லை. அகால பிரளயங்களும், பூகம்பங்களும், மின்னல்களும் இவர்களுடைய பக்தியையும் பாடலேயும் பார்த்து நகைக்கின்றன. இந்திய நாட்டில் கோவில்களும், மசூதிகளும், சர்ச்சுகளும் கடந்த 5000 வருஷமாக ஒன்றுக்குப்பதாக நாடு முழுமையும் நிறைந்து கிடக்கின்றன. அவைகளில் கூடி கூச்சலிடும் மக்கள் கோடானகோடி. இந்த மக்களில் வருஷாவருஷம் வாந்திபேதியால் இறக்கின்றவர்கள் 4 லக்ஷம். வைசூரியால் வதைப்படுவோர் 100 லக்ஷம். மலேரியாவால் சாகின்றவர்கள் 50 லக்ஷம். நேற்று நடந்த பூகம்பத்தில் மாண்டுமடிந்து கஷ்டப்பட்டோர் கணக்கு இன்னும் அகப்படவில்லை. இவர்கள் தொழும்கல்லுக்கும், கட்டைக்கும் இவர்கள் போடும் சண்டைகளால் மடிகின்றவர்கள் பல்லாயிரம். கடந்த 5000 வருஷங்களாக நமது நாட்டு பக்தர்கள் இவ்விதமாக அலங்கோலப்பட்டு வந்திருந்தும், உண்ணும் உணவை, தங்கும்வீட்டை, குடிக்கும்பாலை, கோவில்களுக்கும் சோம்பேரி பிராமணர்கட்கும் தின்னத்தூங்கி பண்டாரங்களுக்கும் தூர்விநியோகித்து வருகின்றார்கள்! எங்கள் முன்னோர்கள், பிராமணனுக்கு அன்னமிட லக்ஷரூபாய் மதிப்புள்ள சொத்தை தர்மம் செய்திருக்கின்றார்கள். ஆனல் எங்களை சுற்றி வாழும் மக்களின் வாழ்வு, பன்றியின் வாழ்வைவிட கேவலமாயிருக்கின்றது. பன்றிக்கு நோய் வந்தால் பன்றியை வளர்ப்பவன் கவனிக்கின்றான். ஆனல் எங்கள் மீன் பிடிக்கும் மக்களுக்கு நோய் வந்தால் அம்மனுக்குப் பூசையும், பிராத்தனையும், பிடாரிக்கு காவுபலியும் இடுகின்றனர். இவ்வித நிலைமையிலுள்ள கிராமங்கள் நமது நாட்டில் 15, 20 லக்ஷக்கணக்காக நமது நாட்டில் இருக்கின்றனவாம்! இந்த நிலைமை, கடந்த 5000 வருஷங்களாக இருந்து வருகின்றன. இந்நிலைமை, நமது நாட்டில்மாத்திரமல்ல, அகில தேசங்களிலும் இருந்து வருகிறது. அந்தந்தகாலத்து இராஜாங்கங்களாலும் அந்தந்தகாலத்து மதஸ்தாபனங்களாலும், அந்தந்தகாலத்து சமூகசீர்திருத்தங்களாலும், அந்தந்த காலத்து பிலான் திராபிக் அசோசியேஷன்களாலும், தர்மஸ்தாபனங்களாலும் இந்த அகோர நிலைமை குறைவுபடவில்லை என்றால் மனிதனுடைய ஆணவத்தையும் மூடத்தனத்தையும் எவனென்று மதிப்பது! என்னென்று சொல்வது! எவ்வளவோ நமது நாட்டில் வல்லரசுகள் ஆண்டுவந்தனர். எவ்வளவோ தத்துஞானிகளும் பக்தர்களும் மகாத்மாக்களும், சீர்திருத்தங்களும் அரசியல் கட்சிகளும்

மதங்களும் அரசாங்கங்களும் :: :: கடும் போர்களை ஆதரிக்கின்றன.

நமது நாட்டில் தோன்றியும், பெரும் பான்மை மாந்தர்க்குவிளையும் உணவில் ஒரு கைபிடி சாதம் அதிகப்படவில்லை என்றால், எந்தகாலத்தில் தான் நமது இந்திய மக்களுக்கு விமோசன மென்கின்றோம்! இன்றைக்கும் நமது மகாத்மாக்களும், தலைவர்களும் ஜெயிலில் கிடப்பதாலும், பட்டினி கிடப்பதாலும், நாட்டு மக்களுக்கு விமோசனம் வருவதாக நினைக்கின்றார்கள். இத்யாதி உடலை வருத்தும் பைத்தியம் நமது நாட்டின் புராதன பைத்தியமென்று உணர்ந்திலர். இந்த பைத்தியம் இருக்கின்றவரையில், நமது தேசம் உருப்படாதென அறிக.

இது சம்பந்தமாக ஓர் புராதனக் கதையுண்டு. 2000 வருஷத்திற்கு முன், இக்கதை ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஒருநாள் தான் ஓட்டிக்கொண்டு போகும் யவணனுடைய (Greek) வண்டியின் சக்கரங்கள் கழன்று வீழ்ந்ததைக்கண்டு, தனது நாட்டு தெய்வமாகிய ஹெர் குலீஸ் தேவனை, தனது வண்டி அடைந்துள்ள நெருக்கடியை நீக்கும்படி பிரார்த்தித்தான். ஹெர்குலீஸ் தேவன் இவன்முன் பிரசன்னமாகி, மூடனே! என்னைப் பிரார்த்திப்பதால் சக்கரங்கள் வண்டியில் தானே மாட்டிக்கொள்ள உன்னுடைய தோலைக்கொண்டு வண்டியை நிமிர்த்தி, சக்கரங்களை மாட்டிக்கொள் என்று சொல்லி மறைந்தான். வண்டிக்காரன் தனது தேவன் சொன்னபடி தன்னுடைய முயற்சியால், விழுந்துகிடந்த வண்டியைத்தூக்கி தானே சக்கரங்களை மாட்டிச்சென்றான். இந்த கதையைக் கேட்டாகிலும் நமது மகாத்மாக்கள் தங்கள் மூட விரதங்களை ஒழித்து, தாங்களே முயற்சி செய்து வருவார்களென்று நம்புகின்றோம்.

நமது நாட்டின் நிலைமையை நீக்க பரோபகாரிகள் என்னசெய்து வருகிறார்களென்று பார்ப்போம். விளையும் பொருளை அதிகரிக்க, நீர்வசதிகள் உண்டுபண்ணுகின்றார்கள். குளமராமத்துகளும், கால்வாய்களும், மேட்டூர் அணைக்கட்டுகளும் உண்டாக்குகின்றார்கள். கடந்த 100 வருஷத்தில் மக்களுக்கு வேண்டிய உணவுக்கு அதிகமாக விளையும் பொருள் அதிகரித்து வந்திருக்கிறது. செய் பொருள்களும் (Articles of Industry) தாராளமாக அதிகரித்து வருகின்றன. ஆனால் இந்திய பெரும் பான்மையோருக்கு போதுமான உணவு கிடைப்பதில்லை, வாழ்வித்கு வேண்டிய வசதிகளும் அடைபக்கூடவில்லை.

என்ன காரணம்?

விளை பொருளையும், செய் பொருளையும் நாட்டிற்கு கொண்டுபோக அபரிமிதமான ரயில் வேக்களும், கப்பல்களும், படகுகளும் உண்டாக்கி வருகின்றனர். ஆனால் அவைகளினுடைய உழைப்பாளிகளை வேலை இல்லை என்று தள்ளிவிடுகின்றார்கள். கூலியைக்குறைத்து வருகின்றார்கள். வேலை நேரத்தை அதிகரிக்கின்றார்கள். இதற்கு என்னகாரணம்? நாடு முழுமையும் கல்லூரி கட்டிடங்களும், கலெக்டர் பங்களாக்களும், கச்சேரி கட்டடங்களும், தாணாக்களும், கோர்ட்டுகளும், சப்கோர்ட்டுகளும் பாரெச்சுகளும் கட்டுகின்றார்கள். ஆனால் கோடானகோடி இந்திய மக்கள் ஒரு அறை குடிசைகளில் வாழவேண்டிய துர்பாக்கியத்தைப் பெற்றுள்ளார்!

ஏன்?

பம்பாய் அகமதாபாத், வங்காளம் முதலிய நெசவு தொழிற்சாலைகளில் பலகோடி மக்கள் உழைக்கின்றார்கள். அந்த நெசவுத் தொழிற்சாலைகளில் உண்டாகும் ஆடை இந்திய 35 கோடிமக்கட்கும் சாதாரணமாக உடுத்தி வாழபோதும். 50, 100 பங்கு அதிகமாக இந்த நெசவுத் தொழிற்சாலை சொந்தக்காரர்கள், லாபமடைந்து வருகின்றார்கள். இவ்வளவு நெசவுப்பெருக்கும் லாபமும் அதிகரித்து வந்தும், தேசத்தில் வாழும் மக்களுக்கு உடுக்க ஆடைபோதாமற் போவதேன்? இவ்வித அகோர போதாமை இந்த காலத்திலுமல்ல, கைநெசவு காலங்களிலும் இந்த ஆடை வறுமை இருந்தே வந்திருக்கிறது. குற்றாலம், கொரநாடு, மதுரை, காஞ்சி முதலியஇடங்களில் (In the Halcyon days of hand woven iudustry) கை நெசவு அடைந்த தேர்ச்சி காலங்களிலும், எவ்வளவு பேர் குற்றாலம் கொரநாடு சேலையை அணியப் பாக்கியம் பெற்றனர்? காசி துப்பட்டாவை அணிந்த ஒருவனுக்கு, அணியக்கந்தை இல்லாது நாறுபேர் இருந்து வந்திருக்கின்றனர்! இந்திய நாட்டுப் பஞ்சும், பருத்தியும் வெளிநாட்டிற்குப் போய்க்கொண்டிருக்க, உள்நாட்டு மக்களுக்கு ஆடை போராத தேன்?

இந்திய நாட்டில் கோடானுகோடி ஆடு மாடுகள் வருஷா வருஷம் சாகின்றன. கப்பல் கப்பலாக ஆட்டுத் தோல்களும், மாட்டுத் தோல்களும், எலித்தோல்களும், புலித்தோல்களும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இந்த ஏற்றுமதி வர்த்தகத்தால் தோல் வியாபாரிகள் லக்ஷாதிபதிகளாயிருந்துவருகிறார்கள். ஆனால் தோல் பதப்படுத்தும் இடங்களில் (Tannery) தொழில் புரிவோருக்கு கொடுக்கும் கூலி குடிக்கக் கூழுக்குக்கூட போதா. இந்த தோல் பதப்படுத்தும் சாலைகளில் வேலை செய்வோரைப் போய் பார்த்து வாருங்கள்! இவ்வளவு தோல் நாட்டில் கிடைத்தும், நமக்கு எத்தனை பேருக்குப் பாதரக்ஷை வாங்கசக்திபுண்டு? பாம்பு கடியால், பிரதி வருஷமும் இறக்கின்றவர்கள், 6000 பேர்களாம்! இவ்வளவு பேர் மரணத்திற்குக்காரணம், பாதரக்ஷை இல்லாமல் நமது மக்கள் நடப்பதாலென அறிக. (What a cruel contrast between the millionair leather merchant and the poor worker of the leather factory who dies in the fields of snake bite for want of a Slipper!) தோல் வர்த்தகத்தால் சம்பாதிக்கும் லக்ஷாதிபதிக்கும், ஓர் இரண்டணா பிரதரக்ஷையின்றி பாம்பு கடியால் மரணமடையும் தோல் ஷாப்பு தொழிலாளிக்கும் என்ன கொரே வித்தியாசம்!

கோடானு கோடி மரங்களிருந்தும், நமது மக்கள் எத்தனை பேருக்கு உட்கார நாற்காலி உண்டு! எழுத மேஜை உண்டு! படுக்கக்கட்டிலுண்டு! எத்தனை ஜன்னல் உண்டு! எத்தனை அழகிய பீரோக்கள் உண்டு! ஆனால் சிலருக்கு மாத்திரம் ஒரு நாற்காலிக்கு 100 நாற்காலிகள் உண்டு; ஒரு சோபாவிற்கு 10 சோபாக்கள் உண்டு; முகம் பார்க்கும் நிலக்கண்ணாடி உண்டு; துணி மணிவைக்க அழகிய பீரோக்கள் உண்டு, வார்டு ரோப்ஸ் உண்டு; காம்மோட்ஸ் Commodes, Benches, stools etc! ஏன்?

உலகிலும் அந்தந்த நாடுகளிலும் சாதாரண சுகபோகங்களைக்கொண்டு (Ordinery Comforts of life) வாழ்வை உயர்த்திக்கொள்ள எல்லாமிருந்தும், கண்ணிருந்தும் குரியனைப்பார்க்க முடியாதவர்போல், பெரும் பான்மை உலக மக்கள், இந்த வறுமையின் காரணத்தை விசாரித்து உணராமல், பிறவிக் குருடர்களைப் போல் இருப்பானேன்! இந்த நிலைமை, 4000 B. C. முதற்கொண்டும் அல்லது 400 A. D. முதற்கொண்டும், பண்டைகால முதல், நாளது வரையிலும், பெரும்பான்மை மக்கள் வாடி வதங்கி கிடப்பானேன்? இந்த புராதன உலக வறுமைக்கு, அசீரியன், கால்டியன், ஈஜிப்ஷன் சாதுக்களும் (Sage) கிரீஸ், ரோம் பூர்வகால தத்துவ ஞானிகளும் (Ancient Philosophers) புத்தர், ஏசு, முகமது முதலிய மதக்கர்த்தாக்களும், அந்தந்த காலத்து அரசுகளும், பலவித பரிகாரங்களை உபதேசித்து வந்தும், 150 கோடி உலக மக்கள், பசியாலும் பிணியாலும், வேலையில்லாமையாலும், போராலும், யுத்தங்களாலும் அவதிப்பட்டு சாவானேன்!

உலக மதங்கள், பாரத ராமாயண சண்டைகளைத் தடுக்கவில்லை. ஆதி காலம் முதல் நாளது வரையிலும் உலகில் நடந்த போர்களை, எந்த அரசும் தடுக்கவில்லை. மதங்களும் அரசாங்கங்களும் கடும் போர்களை ஆதரித்து வந்திருக்கின்றனவே ஒழிய, உலகில் சாந்தமும் சமாதானமும் நிலைபெறச் செய்யவில்லை. என் தேசம் சிறிது, உன் தேசம் பெரிது; எனது கடவுள் பெரியோன், உனது கடவுள் சிறியோன், என்ற சனவாதங்களைக் கொண்டு மதங்களும், கடவுள்களும் உலகத்தைப் படாதபாடு இதுகாறும் படுத்தி வருகின்றன. மலைப்பிரசங்கம் [Sermon in the mount] என்கிறார்கள்! பகவத்கீதை என்கிறார்கள்! மகமத் நபியின் திருவாய் மொழி என்கிறார்கள்! வேத வேதாந்த மென்கிறார்கள்! கொன்றை வேந்தன், ஆத்திசூடி வரைக் கால் பாடம் என்கிறார்கள்! நீதி நெறி நன்னூல் என்கிறார்கள்! நான்கு வேதங்களாம்! பதினென் புராணங்களாம்! 64 கலைகளாம்! சைவ நூல்களாம்! வைணவ நூல்களாம்! பைபிளாம்! குர் ஆனும்! சங்கரர் தத்துவமாம்! ராமானுஜ விசிஷ்டாத்துவைதமாம்! சங்கர் மகாபாஷ்யமாம்! சாங்கிய தத்துவமாம்! ஹெகெல்னிசமாம்! [Hegelnism] ஸ்பென்சரினிசமாம் [Spencerianism] ஷாப்பென் ஹெரினிசமாம் [Shoppenheurnism!] கிரீனிசமாம் [Greenism!] பெர்கலனிசமாப் [Berklanism!] ஹியுமிசம் [Humism!] லாக்கிசமாம் [Lockism!] இவ்விதபல இசங்களாலும், [Ism] ஒரு கைப்பிடி அன்னம் உலகில் அதிகமாக விளைந்ததாக இல்லை! களையும், நிருட்டையும், கொலையையும், மோசத்தையும், வஞ்சனையையும் நிறுத்திய தாக இல்லை!! ஒரு கன்னத்திலடித்தால், மற்றொரு கன்னத்தை காட்டு என்று சொன்ன ஒரு பண்டைகால புராதன உலக வறுமைக்கு, அசீரிப்பெரியோன் ஸ்தாபித்த மத வை

உலக துன்பங்களை அழிக்கவே காரல் மார்க்ஸ் தோன்றினர்.

ராக்கியத்தால், உலகம் பட்டபாட்டையும், கெட்ட கேட்டையும்கேட்க இருதயம் துடிக்கிறது!!! இனிவரும் ராமராஜ்யத்தில் பசுவும் புலியும் ஓர் துறையில் நீர் அருந்துமென்று காந்தியார் கூறுகின்றார். ஆனால் அந்த ராம ராஜ்யத்தில் அயோத்தி தேச முதல் இலங்கை வரை இரத்தகளமாக்கியதை வால்மீகி வரைந்துள்ளார். அஸ்தினபுரத்தை ஆண்ட தரும ராஜனும், 18 நாள் யுத்தத்தில் பல கோடி இந்திய மக்களை, குருக்ஷேத்திரத்தில் மண்ணுக்காக மடிய வைத்தனனன்றே!

உலகை ஆளும் அரசாங்கங்கள் மூலமாகிலும், உலக மக்களுக்கு சுக முண்டா என்று பார்ப்போம். பண்டைகால அரசுகளை சரித்திரக்காரர்கள், Tax gathering Empires என்பார்கள். அதாவது, வரி வசூல் செய்யும் தீகாதிபத்திய அரசுகளென்று கூறுகிறார்கள். அதற்கு முன் இருந்த அரசுகள், Predatory States என்பார்கள், அதாவது, கொள்ளையிடும் அரசுகளாம். மேலே விழுக்க ஒரு பல்லுக்காக குதப்மினர் என்ற ஓர் ஸ்தம்பத்தை மகமத் டோக்ளாக் கட்டினான்! இன்றைக்கும் தற்கால அரசுகள், Cenotaph என்றும், War Memorial என்றும் சுதந்திரத்தேவிக்கென்றும்,கோடானு கோடி உலக மக்கள் உழைத்த செல்வத்தைக்கொண்டு, கல்லிலும், சுண்ணும்பிலும், சிமிட்டிலும், பாழ் படுத்துகின்றார்கள்! கோடனுகோடி இந்திய மக்கள் வாழும் கிராமங்கள் போதுமான நீர் வசதியில்லை, விளக்கில்லை, சுகாதார வசதிகளில்லை, சுத்தமாக்கும் எஜன்சிகளில்லை. சர்க்கார் வம்சத்தார் வாழும் நகரங்களில் என்ன எலக்டிரிக் வெளிச்சம்! என்ன தார் ரோடுகள்! என்ன டிராம்வேக்கள்! என்ன ஆஸ்பத்திரிகள்! என்ன மருத்துவ சிகிச்சைகள்! என்ன குழந்தை பாதுகாப்புகள்! என்ன பீச்சுகள்! என்ன மோட்டார்கள்! என்ன கூத்துமேடைகள்! என்ன சினிமாக்கள்? என்ன ஆகாய தோனிகள்! ஆனால் நமது நாட்டு நகரங்களில் வசிப்போர் 5-கோடி, நமது நாட்டு கிராமங்களில் வசிப்போர் 30-கோடி. எந்த ராஜாங்கத்திலும் பெரும்பான்மை உலக மக்கள் கவலையற்று சுகித்துவாழ்ந்து வந்ததாகிலும் வாழுவதாகவும் தெரியவில்லை. அரசுகள் ரயில்வேக்களையும், கப்பல்களையும், வாராவட்களையும், ரோடுகளையும், வர்த்தகம் பெருகவும் அவ்வித வர்த்தகங்களால் சிலரே செல்வவந்தராகவும் அமைக்கின்றார்களை ஒழிய பொதுஜன வாழ்க்கையை உயர்த்தினரில்லை. இந்த அடிகள் தவறுதலுக்கும், மதங்களின் தவறுதலுக்கும், தத்துவஞான தவறுதலுக்கும் என்ன காரணம்?

உலக வறுமைக்குக் காணம்.

உலக மக்களுக்குப் போதுமான உணவுக்கும், ஆடைக்கும் இருப்பிடத்திற்குமேல் உலகில் உண்டாக்கப் படுகிறது, என பல மெஞ்ஞானிகளும் கூறுகின்றார்கள். நமது பார்வைக்குத் தோன்றும் இந்த விஷயத்தை அரசுகளும் ஒத்துக்கொள்கிறார்கள். அப்படியிருந்தும், போதாமையும் இல்லாமையும் மக்களைப் பண்டைக்கால முதல் வாட்டி வருகின்றன. பொருளாதார நிபுணர்கள், உலகம் வருந்துவது இல்லாமையாலல்ல, அதிகத்தால் [Surplus] வருந்துகின்றது என்று கூறுகின்றார்கள். The World is suffering not through want but through excess, is the verdict of many an economist]. இந்த அதிகம் எந்த மக்களுக்கு உபயோகப்படுகின்றது? மக்கள் உழைப்பால் உண்டான இந்த "அதிகம்" மக்கள் வயிற்றுக்கு உதவாமல், உலக ஆடம்பரங்களுக்கு விநியோகப்பட்டு வருவதால், பண்டை காலமுதல் நாளது வரை உலகம் படும் துயரத்திற்கு, இந்தத் தூர்வினியோகம் [Moldistribution] முதற்காரணமாயிருக்கிறது. இந்த "அதிகம்" கோவில்களுக்கும், குளங்களுக்கும், மூட பக்தியை வளர்க்க உபயோகப்பட்டு வருகின்றது. மனிதனுடைய வீண் பெருமையை வளர்க்கும் நவரத்தினங்களுக்கும், நகைகளுக்கும் உபயோகப்பட்டு வருகின்றது. கல்லுக்கும் செம்புக்கும் செய்யும் சிலே தனங்களால் வீணையும் மூடநம்பிக்கையை வளர்க்க உதவுகின்றது. மனிதனே மனிதன் கொல்லும் ஆயுதங்களுக்காகசெலவிடப்படுகின்றது. இந்த அதிகத்தைகொண்டு டம்பத்தை வளர்க்கும் வசதிகளுக்கு செலவிடப்படுகின்றன. இந்த மிகுதியை தானத்திலும் தருமத்திலும் செலவிடப்பட்டு மக்களை சோம்பேறியாக்கும் வியர்த்தத்தில்உண்டாக்குகிறது சத்திரங்களும், சாவடிகளும், அன்னதானங்களும், சொர்ணதானங்களும், பிராமணர்கடகும்,மடாதிபதிகட்கும், வழக்கிற்கும், வில்லங்கத்திற்கும், உதவுவது இந்த மிகுதியன்றே! நமது நாட்டு 556 சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், மிராசுதார்களும், சுரோத்தியம்தார்களும், உழைப்பின் நீர் உடலை வளர்க்கும் சிலச்சுவான்களும், கடனுக்கு வட்டி வாங்கும் சோம்பேரியும், வீட்டிற்கு குடைக்கூலி வாங்கும் சோம்பேரியும், யாதொரு உழைப்புமின்றிமோட்டார்காரர்களில் சோம்பித் திரிவது இந்த மிகுதிபாலன்றே! வாழ்விற்கு அத்தியாவசியமாக வேண்டுவதற்கு அதிகமான சம்பளத்தைப் பெறும் ராஜப்பிரதிநிதிகளும், கவர்னர்களும், ஜட்ஜுகளும், கலெக்டர்களும் தங்களுக்கு மாத்திரமல்ல, தங்களுடைய எழேழு சந்தியாரும் வேலையின்றி பிழைத்து வாழ சேமிக்கப்படும் செல்வம் யாவும் இந்த மிகுதியாலன்றே! இந்த மிகுதியின் ஆகாரத்தையும் அதன் தூர்விநியோகத்தையும் விசாரித்தறிவோம்.

மிகுதியாவதென்ன?

பண்டை கால முதல் செல்வம் உண்டாகும் மார்க்கங்களையும் அப்படி உண்டாகும் செல்வங்களுக்கு யார் உண்மையாக உரியவர்களென் பதையும், எவ்விதமாக உலக செல்வத்திற்கு யாதொருஉரிமையும் இல்லாதவர்கள் உரிமை கர்த்தர்களாக வந்ததையும், உலக செல்வங்கள் சகலருடைய வாழ்விற்கு விநியோகப்படாமல், சிலரே தூர்விநியோகப்படுத்தி வந்ததையும் விசாரித்து உணராத தோஷத்தால், மதங்கள் காட்டும் வழிகளும், நீதிநெறி மார்க்கங்களும், தத்துவ ஞானங்களும், அரசுகளின் ஏற்பாடுகளும், உலகு படும் துன்பத்தை நீக்க முடியாமற் போயின.

உலக செல்வம் உண்டாகும் வகை.

எல்லா செல்வங்களும் உழைப்பால் உண்டாகின்றன. நிலத்தில் விளையும் தானியமாயினும், சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்படும் நவரத்தினங்களாயினும், எல்லாம் உழைப்பின் பயனே. நிலங்கள் இருக்கலாம், நீர் இருக்கலாம், மண் இருக்கலாம், கற்கள் இருக்கலாம். இவைகள் யாவும் செல்வமல்ல. பூமியில் புதைந்து கிடக்கும் கோடானுகோடி விலை மதிப்புள்ள தாதுக்கள் [Minarels] செல்வமாகா. அவைகளைத் தோண்டி எடுத்து வந்து, மனிதன் கைப்பட்ட மாத்திரத்தில் தான் செல்வமாகும். காடுகளில் வேண்டிய மரங்களிருக்கலாம். அவைகள் செல்வமாகா. அவைகள் மனிதனால் வெட்டப்பட்டு, கப்பலோ, ஆயுதங்களோ, வீடுகளோ, படங்களோ, வாகனங்களோ, பொம்மைகளோ, வண்டிகளோ அல்லது ரதங்களோ செய்யப்படுமேயானால், அப்பொழுது தான் அவைகள் செல்வமாகும். இரும்பு ஓர்வித மண். இந்த இரும்பு மண்ணை [Iron ores] வெட்டி எடுத்து, தண்டவாளங்களாயினும், கர்டர்களாயினும், ரயில்வண்டிகளாயினும் செயயப்பட்ட பிறகே செல்வமாகும். மண் எண்ணை என்று சொல்லப்பட்ட கெரோசின் ஆயில் அல்லது நிலக்கரி, மண்ணில் புதைந்து கிடக்கின்ற வரையில் செல்வமல்ல. இந்த எண்ணை சுரங்கங்களிலும், நிலக்கரி சுரங்கங்களிலும் மனிதன் உள் நுழைந்து, மண்ணெண்ணையை வெளிக்குக் கொண்டு வந்து சுத்தமாக்கி யபிறகே செல்வமாகின்றது. இவ்விதமாக எந்த இயற்கை பொருளாகிலும் இருந்த போதிலும், உழைப்பவனுடைய கைப்பட்ட மாத்திரத்தில் அவைகள் செல்வமாக மதிக்கப்படுகின்றன. நிலங்களும் இருக்கலாம், நீரும் இருக்கலாம், கால மழையும் பெய்து வரலாம், ஆனால், உழவன், உழுது, காலத்தில் விதைத்து, இளை எடுத்து தண்ணீர் பாய்ச்சி வந்தால்தான் விளைந்த தானியம் செல்வமாகும். உலகில் எவ்வித விளைபொருளாயினும், எவ்வித செய் பொருளாயினும். எவ்வித செய்பொருளாயினும், விளைந்த பிறகும் செய்த பிறகும் செல்வங்களென மதிக்கப்படும். விளைவிப்பதற்கு முந்தியும், செய்விப்பதற்குமுந்தியும், உலகிலுள்ள எல்லா இயற்கைப் பொருள்களும் யாருக்கும் சொந்தமில்லை. அவைகளின் மேல் மனிதனுடைய கைப்பட்ட மாத்திரத்தில் செல்வங்களாக மாறுகின்றன. உலக இயற்கைப் பொருள்களை சிலர் கொள்ளை அடித்துவைத்துக் கொள்ளலாம் வேலிபோட்டுவைத்துக் கொள்ளலாம் பட்டாபோட்டுவைத்துக் கொள்ளலாம். சொந்தக்காரர் என்றும் பதிவுசெய்து கொள்ளலாம். ஆனால் அவ்வியற்கைப் பொருள்களை ஒரு பைசாவுக்கும் வாங்கமாட்டார்கள். உழைப்பவன் உழுது பயிரிட்ட பிறகும், சுரங்கத்தில் நுழைந்து வெளிப்படுத்திய பிறகும், மரங்களை வெட்டி கப்பலும், வீடாகவும் அமைக்கப்பட்ட பிறகு அவைகளுக்கு விலை மதிப்பு ஏற்படுகின்றன. எல்லாவித விலைபொருள்களுக்கும், எல்லாவித செய்பொருள்களுக்கும், அவைகளின் மேல் மனிதன் கைப்பட்ட பிறகே அவைகளுக்கு விலை மதிப்பு ஏற்படுகின்றது. வாஸ்தவத்தில், எல்லா வஸ்துக்களுடைய விலை மதிப்பு மனிதனுடைய உழைப்பால் ஏற்படுகின்றது. மனிதனுடைய உபயோகத்திற்கு விலைவிக்கப்பட்டும், செய்யப்பட்டும் வரும் சொத்துக்கள் யாவும், மனிதன் உழைப்பால் உண்டாகின்றன. ஆதலின், எந்த வஸ்துவை நாம் உபயோகப்படுத்தி வந்தபோதிலும், மனிதனுடைய உழைப்பைத்தான் உபயோகப்படுத்தி வருகின்றோம் என அறிக. யதார்த்தத்தின் விலை மதிப்பும், மனித உழைப்பும் ஒன்று. நாம் வஸ்துக்களை விலை கொடுத்து வாங்கும்போது, உண்மையில் மனித உழைப்பைத்தான் வாங்குகின்றோம். மனித உழைப்பே விலையாகும். [Labour is value] மனித உழைப்பைத்தான் விலை என்றார், காரல் மார்க்ஸ் (Karl marx). இந்த விலை யாரைச் சேரவேண்டும்? உழைப்பால் உண்டான விலை முழுமையும், உழைப்பவனுக்கு உதவாமற் போன தோஷத்தால் உலகில் உழைப்போர் தரித்திரத்திற்கும், வறுமைக்கும் ஆளாய் நிற்கின்றனர்.

தொடர்ச்சி 14.ம்பக்கம பார்க்க.

இஸ்லாமும் :: :: சமதர்மமும்.

(தோழர் அ. இ. ரஹ்மான்)

இஸ்லாம் என்றாலே அமைதியின் பொருள் சாந்தி, சமாதானம் என்பனவாகும். இஸ்லாமியக் கொள்கையை ஒப்புக்கொண்டு அதைப் பின்பற்றுவோர் சாந்தியும் சமாதானமும் பெற்று வாழ்ந்தால் தான் ஏனையோர் அதை சாந்தி நெறி யென்றுபயோகிப்பார்களேயொழிய, பேச்சளவில் எழுத்தளவில் இஸ்லாம் சாந்தி நெறி! சாந்தி நெறி!! யென்று சாற்றுவதால் எவரும் அதைநம்பார். ஆதலாலேதான் இன்றைய இஸ்லாமிய உலகைக் கண்ணுற்று அதை சாந்தியுடைய தென்று இயம்பார்-ஏன்! இன்றைய இஸ்லாமிய நாடுகளுலகில் சாந்தியை யுண்டாக்குஞ் சமதர்மக் கொள்கையுடையதா- இஸ்லாம்? என்று வினவுங்களில் பலருக்கு நிட்சயமாகத் தோன்றலாம் ஆனால் நீங்கள் இஸ்லாமிய அற நூற்களைத் துருவி ஆராய்ந்தால் இஸ்லாந்தான் சமதர்மச் சாந்தி நெறி யென்றும் அதை உலகிடைபிரப்பியவர் நபி முஹமத் என்னும் பேரறிஞர் என்றும் நனகுணர்வீர்கள். தற்சமயம் ருஷியாவிலிருக்கும் சமதர்மக் கொள்கையானது முஹம்மத் நபி அவர்கள் ஸ்தாபித்த சமதர்மக் கொள்கையில் சிற்சில மாறுதல்கள் செய்து ஆரம்பிக்கப்பட்டதேயாகும். ஆனால் முஹம்மத்நபி அவர்களால் ஸ்தாபிக்கபெற்ற சமதர்ம அயக்கத்தை, பின்னுள்ளோர் தத்தம் சுயநலத்தின் பொருட்டு திரித்துப் பொருள் கூறி தங்கள் சுயநலத்திற்கு ஆதாரமாக்கிக் கொண்டதினாலுதான், இன்று உலக முழுதும் இஸ்லாம் பரவாமலும், எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தும், வறுமை தோடு உலகமெங்கும யுத்தமேகங்களும்கவிந்துகொண்டிருக்கிறது. ஆனாலின்று இஸ்லாமியப்பெரியாரின் பேரில் எவரும் இஸ்லாம் சமதர்மம் அன்றென்று அறைய முன்வரார். அப்படியானால் உணவருந்தும்போது ஆலபத்தினின்று தொழுயபொழுதும் எழையும் பணக்காரனும் நெருங்கி இருப்பதொன்றே போதுமானதா? இது ஒன்றிறகு தான் இஸ்லாத்தை சமதர்ம நெறி யென்று சாற்றுவதா? இத்தகைய சமதர்மத்தினால் மனிதன் அடையும் லாபமென்ன எ றவினவினால் இதுபோழ்து முஸ்லீம் மூத்தோர் என்று கூறிக்கொள்வோர் எவரும் தக்க மறுமொழி கூறார். எனவே இன்றையதினம் இஸ்லாம் எனனும் சமதர்மச் சாந்தி நெறி, சில சுயநலப் புரோகிதர்களிடம் மட்டுமல்ல ஊரார் உழைப்பில் உண்டு உலக சுகபோகங்களை பெருமிதமாக அனுபவிக்கும் சோம்பேறிக் கூட்டத்தால் ஒழிக்கப்பட்டு ஒரு போலி இஸ்லாம் உலகினிடையே காட்டப்பட்டுவருகிறது. அப்போலி இஸ்லாத்தையே இன்று நீங்கள் காணும் வருகின்றீர்கள் அதையே எமது சுயமரியாதைச் சமதர்மத் தோழர்களும் எனனஞ்செய்கிறார்கள். எனவே அசலான இஸ்லாத்தைத்தையும் சமயப் புல்லுருவிகளான மௌலானாக்கள் மௌலவிகள், ஆலீம்கள், பக்கிராதிபர்கள், பணக்காரர் கள் முதலியவர்களின் ஆதிக்கத்தை அழித்து உண்மையான சமதர்மக் கொள்கையை (இஸ்லாத்தை) வளர்க்கப்பாடுபடும் சுயமரியாதை இயக்கத்திற்கு நாணும் என்போன்ற முஸ்லீம் யுவர்கள் பலரும் போதிய ஆதரவும் நன்றியும் காட்டத் தயாராயிருக்கின்றோம்.

சமதர்ம வாதிகளால் தங்கள் கொள்கையை ஒப்புக்கொண்டு நடப்பவர்களை தோழர்கள் Comrade என்று அழைத்து வருகின்றனர். ஆனால் இப்பதம் முதன் முதலாக இஸ்லாமியர்களால் உபயோகிக்கப்பட்டதாகும் அதாவது ஸாஹிப் என்று கூறப்படும் அரபிப்பதமேயாகும். ஸாஹிப் என்றால் தோழன் என்பதே யாகும். எனவே சமதர்ம வாதிகளால் இன்று கூறப்படும் ஸாஹிப் (தோழர்) என்ற பதம் நபிகள் நாயகம் காலத்தில்அவர்களுடைய நண்பர்களை ஸஹாபாக்கள் என்ற அழைக்கப்பட்ட ஓர் அரபிபதத்திலிருந்து வந்ததென்பதை எவரும் மறுத்து மொழிபார்.

உலக மெங்கும் மன்னராட்சியும் அரசாங்களின் ஏதேச்சாதிகாரமும்மலிந்து நின்ற ஞான்று முஹம்மத் நபி அவர்களே உலகில் முதன் முதலாக மன்னராட்சி மடியச் செய்து குடி அரசாட்சியை ஸ்தாபித்ததோடு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஓட்டுரிமையையும் வழங்கினார்கள். மேலும் முஹம்மத் நபிக்குத் தாம் ஒரு அரசராய் இருக்கச் சந்தர்ப்பம் பெற்றும் அரசராயிராமல் தற்சமயம் ரஷியாவிலிருக்கும் சர்வாதிகாரி போன்றே இருந்தார்கள் என்பதை அவர்களின் சரித்திரம் நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

சமதர்ம நீதியின்படி "சர்வாதிகாரியாலுமே" பிறருடைய உழைப்பின் பயனை உடல் நோவாது இருந்துண்டு வாழ்வது பெருங் குற்றமும் தண்டனைக்குரிய விஷயமுமாகும். இதுவே இன்றைய சமதர்ம ஆட்சியில் நடைபெறும் விசயமாகும். இச் சமதர்ம நெறியை முஹம்மத் நபி அவர்கள் தம் வாழ்க்கையில் மிகக் கண்டிப்பாய் அனுஷ்டித்துக் காட்டியுள்ளார். அவர் அரேபியா நாட்டின் சர்வாதிகாரியாயிருந்தும், ஏராளமான திரவியங்களை தன்னிஷ்டம்போல் செலவு செய்ய அதிகாரம் பெற்றிருந்தும் தான் அனுபவிப்பது தவறு என்று தானே யுழைத்து அதன் வரும்படியால் உயிர் வாழ்ந்து வந்தார். அவ்வித எழிய வாழ்க்கை நடத்திய தனால் அவர் அக்காலத்திலே அரைப் பட்டினியும், கஞ்சியுமாக வாழ்ந்தார். அவர் உயிர் துறந்தபொழுது விளக்கேற்ற வீட்டில் எண்ணை இல்லாது அவரது ஆயுதங்களை அடகுவைத்து எண்ணை வாங்கும் படி நேரிட்டு விட்டது. இவ்வித வாழ்க்கையை அவரைக் சீப் முதலியவர்களும் அனுஷ்டித்துக் காட்டியதாக அவர்களது சரித்திரம் நன்கு விளக்குகிறது. இவ்விதமாய் ஊரார் உழைப்பின் பயனை உடல் நோவாது சோம்பேறியாயிருந்து அனுபவித்துக் கொண்டு அவரவர் உழைப்பின் பயனை அவரவர்கள் அனுபவிக்கும் சமதர்ம ஆக்ஷியை-முஹமத் நபி அவர்கள் முன் மாதிரி காட்டிய ஆக்ஷியை இன்று இஸ்லாமியர்கள் என்போர்மறுப்பது நீதியா? என்பதை உலகம் இன்றல்லாவிடினும் என்றுவது காணுயற் போகும்.

ருஷிய சமதர்ம ஆக்ஷியின் சட்டப்படி ஒருவன் மற்றொருவனுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பதும் வாங்குவதும் பெரிய கிரிமினல் குற்றமாகும் அவ்விதமாய்ச் செய்பவர் கொடுத்தவனேக்குரியவராவர். இதுவே முகம்மத்நபி அவர்கள் தம் ஆட்சியிலும் செய்து காட்டியுள்ள நல்விஷயமாகும். இன்னும் எமது முஸ்லிம்கள் வட்டிக்குக் கொடுத்தும் வாங்கியும் லேவாதேவிகள் செய்து கொண்டிருப்பவராலுலும் எவராவது முஸ்லிம்கள் வட்டிக்குக் கொடுத்து வாங்களாம். என்று கூறினால் அவர்களுக்கு உடனே தக்க புத்தி கற்பித்து விடுவர் என்பது அனுபவத்தில்கண்ட உண்மையாகும்.

"சமத்வம்" என்னும் அர்த்தத்தையுடைய "ஸவியத்" என்னும் அரபி வார்த்தையையே தற்சமயம் ரஷியாவில் அரசாட்சியைக் கைப்பற்றியுள்ள சமதர்ம வாதிகள் (சோஷியலிஸ்ட்ஸ்) தங்கள் நாட்டை சோவியத் ரஷியா (சமதர்ம ரஷியா) என்று அழைத்து வருகிறார்களென்று பல அரபிப் பாஷா நிபுணர்கள் கூறினார்கள்.

ரஷியாவில் இப்பொழுது நடைபெறும் சமதர்ம ஆட்சியில் எவரும் தொழில் செய்யாது சோம்பேறியாயிருக்கக் கூடாது. எவரும் பிசைந்து எடுக்கக்கூடாது. ஆனால் அங்கீனர்களுக்கும், யை முடிர்ந்தவர்களுக்கும் அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

இதன் படியே முஹமத் நபிகள் காலத்தில் உடல் வலிமைபெற்ற ஓர் யுவன் அவர்களிடம் வந்து யாசகம் கேட்ட போது உன்னிடம் ஏதாவது பொருளிருக்கிறதா என்ற வினவ அவர் தன்னிடத்திலிருந்த சில பொருள்களைக் கொடுத்தார். முஹமத் நபி அவர்கள் அதை வாங்கியிந்த அந்த ரூபாயைக் கொண்டு ஒரு கோடரி செய்து உனது கையால் அதற் பிடியும் போட்டு இன்று முதல் விறகுவெட்டி விற்றுப்பிழைத்துக் கொள். சரீரத்தில் வலுவுள்ளவர்களுக்கு பிச்சை கொடுப்பது கூடாது கானியம். உம்போன்றோர் பிச்சையெடுப்பது தகாதகாரியம் என்றாவின்றனர்களென்று சரித்திரம் கூறுகின்றது.

சமதர்மக் கொள்கைப்படி நாட்டில் எங்கும் அடிமை யென்றும் முதலாளி யென்றும் தாழ்ந்த ஜாதியென்றும், உயர்ந்த ஜாதி யென்றும், பணக்காரன் என்றும் ஏழை யென்றும் இருக்கக்கூடாதென்பதோடு மேலும் பணக்காரன் என்பவன் மோசக்காரனாக கருதப்படுவதுடன் அதுபோலவே இஸ்லாத்தின் "அடிமையென்ற எவரும் நினைக்கக் கூடாது. முஹமத் நபியவர்களின் பிரதானமான தொண்டு அடிமை வாழ்க்கை ஒழித்த லென்பதே. இன்னும் நபிகள் நாயகம்அவர்கள் "செல்வம் என்பது பொருள் சேர்ந்திருப்பதல்ல; தேவையற்றிருத்தலே செல்வமாகும்" என்றும் "தன்னுடைய கையினல் முயற்சி செய்து சம்பாதிக்கும் கல்ல வியாபாரமே ஜீவனத்திற்குரிய தொழில்களில் மேலானது" என்றும் மொழிந்திருப்பதினின்றும் இஸ்லாத்திற்கும், சோஷியலிஷத்திற்கும் உள்ள ஒற்றுமை நன்கு விளங்கும்.

சமதர்ம ஆட்சியில் ஆணுக்குள்ள எல்லா உரிமைகளும் பெண்கள் பெற்றிருப்பதோடு பெண்கள் பட்டாளத்தில்சேர்ந்துபோர்வீரர்களாகப்பயிற்சி பெற்றிருப்பதுங்கண்கூடு.

நாயகம் அவர்களும் "உங்களுடைய மனைவிகள் மீது உங்களுக்குரிமை களிருப்பது போல அவர்களுக்கும் உங்கள் மீது உரிமையுண்டு"என்றாவின்றதும்அவர்கள் காலத்தில் போரில் பெண்மணிகள் பலரும் கலந்து கொண்டதோடு, சொத்துரிமை, ஓட்டுரிமை, விவாகரத்துரிமை, பேச்சுரிமை விதவாவிவாக உரிமை முதலிய எல்லா உரிமைகளும் பெற்றதோடு கல்வி கேள்விகளில் சிறந்தும் விளங்கினார்கள்.

அபூபக்கர் சித்திக் அவர்கள் அரபி நாட்டின் சர்வாதியாயிருக்கும் பொழுது ஒட்டகையிலேறி ஓர் ஊரிற்கு பிரயாண மானர். போகும் பொழுது

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க

திரு. சைவப்பண்டிதர்

தி. கே. சுப்பிரமணிய

முதலியார் பி.ஏ. அவர்களுக்குவணக்கம்

(கைவல்யம்)

தீண்டாமை சட்ட சம்மத விஷயத்தில் பொதுஜன அபிப் பிராயம் தெரிய இந்தியா கவர்ன் மெண்டார் செய்திருக்கும் ஏற்பா ட்டை வைதீகர்கள் தங்களுக்கு அனுகூலப்படுத்திக்கொள்ள பல ஊர்களில் முதலியார், செட்டி யார்; பிள்ளை, கவுண்டர் முதலிய பாப்பார தாசி மக்களான சூத் திர அடிமைகளில் சிலரைப் பிடி த்து தீண்டாமைச் சட்டத்திற்கு பர்ப்பரனல்லாதவர்களும் விரோ தமாகவிருக்கிறார்களென்று கவர் ன்மெண்டுக்குக் காட்டிக்கொள் ளுவதுபோல கோயமுத்தூர் ஜில் லாவிற்குதரும சாஸ்திரத்தால்பா ர்ப்பாரதாசி மகனுக்கப்பட்டிரு க்கிற தங்களைக் காட்டுகிறார்கள். அதன் வழியே சூத்திர அடிமை யான நீங்கள் வைதீகர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற சபைகளில் பிரசங்கம் செய்கிறீர்கள். சமீப மாகக் கோயமுத்தூர் ஜில்லாவி லும் பேசியிருக்கிறீர்கள். அத னால் அனேக காலமாகத் தன்பப் பட்ட ஏழைகளுக்கு தன்பத்தில் தன்பம், பெருந் தன்பமாகவும் தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனே மனிதன அடிமைகொ ண்ட வழக்கத்திற்கும் வைதீகக் கொடுமைக்கும் உதவியாகயிருக் கின்றன. அதைத் தாங்களும் தங் களைப் போன்ற சூத்திர அடிமை களும் தெரிந்துகொள்ளவே இந் தக கடிதம் தங்களுக்கு எழுதப்ப டுகிறது.

ஏழைகளைத் தன்புறுத்தவும், அடிமைகொள்ளவும் கடவுளா ரிஷிகளோ, மற்றபெரியவர்களோ சாஸ்திரங்களை ஏற்படுத்தியிருக்க மாட்டார்கள். தெய்வத்தின் பெ யராலும், சமயத்தின் பெயரா லும் தன்னிலும் மெலிந்தவர்க ளைக் கொடுமைப்படுத்தி என்றும் காலின் கீழ்ப்போட்டு மிதிப்பதற் குச் சமயங்களுண்டாகவில்லை. ஜாதீயக் கொள்கையின் குறுகின பயிற்சி உள்ளதைக் கவரும் போது தருமச் குறைபையும், குருட்டறிவையும் விளைவிப்பது நிச்சயமென்பதை நீங்கள் உணர வில்லை. இந்த ஜாதியின் கொள் கைக்கு ஸ்வார்த்தமும் செறுக் கும் தானே பிறப்பிடம். அதை நாகரீக உலகத்தில் நடுவது தகை ப்பிறகிடமல்லவா? ஜாதியின் கொ டுமைகளைத் தெய்வீகமாக்குவதில் தான தங்கள் பண்டிதத் திறமை விளங்கவேண்டும்! இதற்குத்தான பண்டிதர்கள் பிறக்கிறார்கள்? சர்வ சாதாரணமாக வழங்கத் தக்க உரிமைகளுக்குச் சிறபபுரி மைகள்: பிறப்புரையடைவ என்று வேதமன்று பண்டிதர்களால் பெயர்சூட்டி மானுஷிகத்தை அவமானப்படுத்தி அதற்குச் சம யமென்றும், சாஸ்திரமென்றும் தெய்வ லாக்கென்றும் பல பொ ய்க்கதைகளைக் கற்பித்துப் பிழைப் பதற்கா பண்டிதத் தொழில்? நம்மவரை நாமே இகழ்ந்து அவர் களிடம் நன்மை பிறப்பதை நாம் தடுத்து அவர்களை உலகம் இகழ வைப்பதுதானா சைவப் பண்டித குணத்தின் ஜீவகாருண்யம்? ஒரு சனசமூகத்தை வலியோராக்கி இழிவடையச் செய்து சரித்திரங் களிலும், சமயங்களிலும் பெரும் பகுதி பொய்யும், புரட்டும் எழுதி வைத்து மானுஷியத்திலே விஷ த்தைக் கலந்ததுபோலச் செய்து வைக்கவா தெய்வம் பண்டிதர்க ளுக்குக் கட்டளையிட்டது? ஆங் கிலேய நாகரீகத்தைத் தலையில் தாங்கி, அதனால் எல்லாப் போ கங்களையும் அனுபவித்துக்கொண் டிருக்கிற உங்களுக்கு வைதீகமும் அதன் சாஸ்திரங்களும் குறுக்கே நிற்பதில்லை. விரைவில் மாறறக் கூடியதும் மாறக்கூடியதுமான சம்பவங்களுக்கு வைதீகமும், அதன் சாஸ்திரங்களும் குறுக்கே நிற்கிறதென்று சொல்லுகிறீர்க ளே இது ஞாயத்திற்குப பொருந் துமா?

தாங்கள் சாஸ்திரம் படித்தவர் கள், அதில் கபிக்கையுடையவர் கள்சனுதனிகள், வைதீகர்கள், வரு ணாச்சிரமக்காரர்கள் என்று சொ ல்லிக்கொள்ளும கூட்டத்தில் பிர சங்கம் செய்கறவர்கள். ஆனதால மேற்சொன்னவர்களின சாஸ்திர ஆதாரங்களைக்காட்டி எழுதினால் தான தங்கள் மனம் நியாய நியா யங்களைக் கவனிக்குமென்று நினை க்கிறேன்.

சிவபெருமானும் பார்வதியும் பள்ளன்பள்ளியாக அவதாரம்செ ய்து அவர்கள் வேரியில் அவர்க ளுடனிருந்து நாற்று நடுகையில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஞான உபதேசம் செய்தார். சிவபெரு மானின மகன சுபபிரமணியனு க்கு குறப் பெண்ணைக் கலியா ணம் செய்துவைத்தார் என்கிற சைவ சாஸதிரங்களும், தமிழ் வேதமென்றும் ஒத்துக்கொள்ளு கிறீர்கள். தீண்டாதான் என்று நீங்கள் சாரணவாகளைக் க

சொல்லப்படுகிற திருக்குரள் தீண்டப்படாத ஜாதியார் செய்த தென்றும், கடவுளிடமிருந்து வேதம் கேட்டதும் ஸ்மிருதிகள் சொன்னதும் பறைச்சி, சக்கிலிச்சி செம்படவச்சி முதலிய தீண்டப் படாதவர்களின் பிள்ளைகள் செய் ததென்றும், முயல், மான், கரி, பாம்பு முதலிய பிராணிகள் பெ த்த பிள்ளைகளும் வேத ஸ்மிருதி களை உண்டுபண்ணினவர்களில் முதன்மை பெற்றிருந்தார்களென் றும் சொல்லப்படுவதெல்லாம் சாஸ்திரங்களாகும். சிவனைப் பே யோடாடி, சுடலையாடி, சுடலை நீர்பூசி சிவன் கோவில் சுடுகாடு ஆனதால் சிவன் பறையன் என் றும் சிலர் சொல்லுவார்கள். இத் தனைக்கும் சாஸ்திரங்களுண்டு. இதனால் நமது கடவுள், அவர் பெண்ஜாதி, மைத்துனன், மகன், மருமகள: குரு, ரிஷிகள், பல பக்தர்கள் எல்லாம் தீண்டப்ப டாத ஜாதியார்களாகவேயிருந்தி ருக்கள். தீண்டப்படாத ஜாதியா ர்கள் தீண்டப்படாத வமசங்க ளைத தீண்டிக்கொள்ளுவதில் உய ர்ந்தஜாதிக்காரர்களான உங்களுக் குக் கஷ்டமென்ன?

சிவனு:, அமனும் பள்ளன், பள்ளியாக விருந்தனை யும் நாற்று நட்டனையும் ஒத்துக் கொள்ளுகிறீர்கள் திருநாளும் கடக்கிறது ஆனால் பள்ளனை தோளிலுக்குள் வந்தால் சிவபெருமானை தீண்டுப்பட்டு மெனகிடுகிறீர்கள். வளளிக் குறத்தி யை புருகசுகடவுள் கல்யாணம் செய்துகொண்டதாகச் சொல்லு கிறீர்கள். குறவன்கோவிலுக்குள வந்தால் முருகன ஓடிவிடுவானென் னறீர்கள். சுடுகாடுதான சிவனு க்குக் கோவிலென்றும் அவர் பூச னது சுடுகாட்டுச் சாம்பலென்றும சொல்லுகிறீர்கள். சுடுகாடுகாக் தும் பலறை பர்வத்தால் சிவன் அரு ள்விளங்குதென்கிறீர்கள். திருக குறளைத் தீண்டாதான் செய்ததென றும் சொல்லுகிறீர்கள். தமிழ் வேதமென்றும ஒத்துக்கொள்ளு கிறீர்கள். தீண்டாதான் என்று நீங்கள் சாரணவாகளைக் க

நீர்கள். வேகண்டிருந்திகள் செய் தது பறைச்சி சக்கிலிச்சியிற்றுப் பிள்ளைகளென்று நீங்களே சொல் லுகிறீர்கள் பறைச்சி, சக்கிலிச்சி யைக்கண்டால் பாவம் வந்துவிடு மென்று சொல்லுகிறீர்கள். இவைகளெல்லாம் ஒரு சிறிது நியாயத்திற்காகவாது பொருந்து கிறதா? புராணசாஸ்திரம் இம்மட் டோடு நிற்கட்டும்.

சனாதன தருமமென்றால் பழய தருமமென்பது பொருள. வேதச ம்மந்தமுடையது வைதீகம் பூர்வ கால தருமத்தை அனுஷ்டிப்ப வன் சனாதனி, வேதத்தை அனு ஷ்டிப்பவன் வைதீகன். நீங்கள் கூடும் சபைகளில் பழய தருமத் தை அனுஷ்டிக்கும் சனாதனிக ளும் வேதசம்மந்தமுடைய வை தீகர்களுமிருக்கிறார்களா? ஆலோ சித்துப்பாருங்கள. வேதவிதிப்படி நீங்கள் நாலாவது வருணமான சூத்திரன்தானே. சூத்திரனுக்கு வேகத்தில் அதிகாரமுண்டா? இல்லையே. நீங்களபடி வைதீக ளுவீர்கள்? சூத்திரனென்றால் பிராமண தாசிமகன் அடிமை என் றும் ஸ்மிருதிகளும், கிரஸமுடை யவன், தக்கி என்றும் நிகண்டும், ஒழுக்கமில்லாதவன், ஆசாரமில் லாதவன், கண்டதைப் புசிப்ப வன் என்று இதிகாசத்திலும் எழு தப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். சிலர் தங்களை சதசூத்தி ரர்கள் என்று நினைத்துக் கொண் டிருப்பதுபோல நீங்களும் உங் கள் நினைத்துக் கொண்டிருந்தால், கல்லமடையன், கல்ல அடிமை, கல்லபார்ப்பார தாசமகன் என்பது தான் சற் சூத்திரன் என்பதற் கும் பொருள் என்பதை சுவாமி தே காசலமும் எடுத்துக்காட்டியிருக் கிறார். சூத்திரன் நடமாடுகிற இடம் சுடுகாடானதால் அவன் பக்கம் வேதம்ஓதகூடாது; சிவ ன்கோவில் கதில் ஈசபதையும் செழு கையுமுருகஷ்ணமூர்த்தி வேண்டும். வே தத்தைச் சொல்லுகிற சூத்திரனி ன நாக்கை அறுக்கவேண்டும். பாரதம் உணர்ந்து வைத்திருக் கிற சூத்திரன் கெஞ்சைப்பிளக வேண்டுமென்றல்லவா வேதஸ்மி ருதிகள் சொல்லுகின்றன. ஆன தால் வைதிகர்கள் என்று சொல் லிக்கொள்ளுகிற பார்ப்பார்களும், தீண்டாமைச சட்டத்திற்கு மட் டும் உங்களச்சாத்துக் கொண்டி ருக்கிற பார்ப்பார்களும் நீங்களும் வேதசாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறீர்களென்று சொ ல்லுவது நியாயத்திற்குப் பொரு ந்தவில்லையே (சகம்பஞ்சுஹி சூத்

தொடர்ச்சி 1-ம பக்கம பார்க்க

கொள்கை விரோதிகள் கூற்று.

ஆப்புகளும் கண்டனங்களும்.

(காம்ரேட்)

முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு பத்திரிகா தர்மம் என்பது சிரித்தாடும் காலம் இது. பத்திரிகை சகாப்தமும் இதுதான். முதலாளி ஆதிக்கத்தின் அட்டகாசத்திற்கும், கடிபுடலுக்கும் கணக்கு வழக்கு இல்லை. பத்திரிகைகளிலிருந்து வரும் முதலாளித்துவச் சில்லறைகளும், முதலாளித்துவச் சில்லறைகளின் பின்னிய வலையில் சிக்கிக்கொண்டு தவிக்கின்றன. பொதுஜன நோக்கமாகிய பத்திரிகைகள் முதலாளிவர்க்கத்தை அண்டி ஒண்டிப் பிழைக்க நேர்ந்திருக்கும் கேவலத்தை சகிக்க முடியாத காட்சி. தத்தித் தத்திப் பிசகின கொடிய கருத்துகள், பொதுஜன ஊழியர்களின் சாமான்யமான உளைச்சலுக்கு, கோணல் மாணலாக வளைப் பைத்தியக்காரர்கள் இரையாகக் கண்முன் முறைபடப்போகும் புதுலாளி ஆதிக்கத்தில் வேறு யார்?

பகிஷ்காரம் வீணா?

காந்தி பகிஷ்காரம் வீண் என்பது சென்னைத் திசைரி ஞானேந்திரன் கூற்று. இந்த அபிப்பிராயம் ஒருதரமல்ல, இரண்டுதரம். காங்கிரஸ் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்னும் கூறிற்று. பின்னும் பலமுறை கூறியே படித்திருக்கிறது காந்திஜியின் கொள்கைகளை. சாதாரண பொது ஜனங்களிடையில் சொல்லலாமென்றும், சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம், பகிஷ்காரம் முதலியவற்றின் கர்த்தாவாகிய காந்திஜீயிடமே, அவருடைய ஆயுதமாகிய பகிஷ்காரத்தைப் பிரயோகிப்பது வீண் என்றும், ஊசிமுனையில் ஊசிமுனை போவது என்றும் விளக்கி எழுதியிருக்கிறது.

சொந்தக் கருத்தையும், சுயேச்சை வாழ்வையும் நாம் கூவி விற்றுக் கட்டித்தழுவி வருகிறோம். அந்த உரிமை யார்க்கும் உண்டு. இரண்டு கடவையில்லை, இரண்டாயிரம் முறை வேண்டுமானாலும் வீணென்று கூறட்டும். காந்தி வரவேற்பைப் பற்றிப் பத்திரிகையாகக் கொட்டை எழுத்தில் பிரசுரித்த திசைரி, சுயராஜ்யத்தைத் தோழர்களின் பகிஷ்கார நிகழ்ச்சிகளையும், பத்திரிகை தர்மத்தைக் கையாடிப் பிரசுரித்துவிட்டு, பகிஷ்காரம் வீண் என்று அபிப்பிராயம் கொடுத்திருக்க வேண்டுமென்பதுவே நமது கருத்து. இப்பொழுது கொடுத்துள்ள அபிப்பிராயமோ ஒருதலைப்பட்சம்.

ஊசி முனையில் ஊசி முனை போவது. பகிஷ்காரத்தில் பகிஷ்காரம் பாயாது. ஆனால் வரவேற்பு நிகழ்ச்சி முதல் பகிஷ்காரம் பாயுமல்லவா? இது திசைரி சமஸ்தானப்பத்திரிகை முதலாளி ஆதிக்கத்தில் களைர் குலைகளை [illegible] பத்திரிகை தர்மத்தை [illegible] பகிஷ்காரம் பாயாது என்பதை [illegible] பகிஷ்காரம் பாயாது என்பதை [illegible] பகிஷ்காரம் பாயாது என்பத

புரட்சி

*ரோடு 1934- மார்ச்சு மீ 4-ஆ

சாம்பியன் திட்டம் சாகடிக்கப்படுமா?

—:o:—

வழக்கம்போலவே இவ்வருடமும் நமது மகாண சட்டசபையின் முன், இவ்வாண்டின் 34-35 வருடவரவுசெலவுகிட்டம்சமர்ப்பிக்கப்பட்டது. சட்டசபையிலுள்ள எதிர்கக்ஷிகளின் பிரசங்கிகளும், அதிகாரத்திலுள்ள கக்ஷியின் அங்கத்தினர்களில் அதிர்ப்தியுற்றோர்களென்போர் சகலரும், வரவு செலவு திட்டத்தைப்பற்றி பேசித் தீர்த்தார்கள். மூன்றாநாள் இதற்காகவென்றே ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களறிதல், ஆலோசனைகளைகேட்டல்-என்ன்றமுறையில் தான் எதிர்கக்ஷியினர்விவாதங்களுக்கு இடமும், நேரமும், ஒதுக்கப்படுவது வழக்கம். இம்மாமூல் சடங்கிற்கு பின்போ, மாகாண சர்க்கார்கடைமுறை முக்கியஉருப்பினர்களான நிர்வாகக்கமிட்டி மெம்பர்கள், அதாவது, மந்திரிகள், லாமெம்பர், ஹோம்மெம்பர், பொக்கிஷமெம்பர் என்ற ஆறுகனவான்களும் முதல் இரண்டு தினங்களிலும், நடந்தபிரசங்கத்தை தோர்க்கடித்துவிடக் கூடிய மாதிரியில், ஏன்இன்னும் அதிகமாகக் கூட்டவே பேசினார்கள். இதுடன இவ்வருட வரவு செலவு திட்டம் நிறைவேற்றப் பட்டது.

இதில் நமது வாசகர்களுக்கு விசேஷ கவனம் செல்ல வேண்டுமென்பது அவசியமல்ல. அப்படியாயினும் இதைமேல் வாரியாக வேனும் கவனியாது நாம்இருந்துவிடுவதற்கில்லை. நமது மாகாண கல்வி மந்திரியான திவான்பகதூர் கனம் எஸ். குமாரசாமி [ரெட்டியார்] அவர்கள் தனது இலாகா சம்பந்தமாக சகோதர அங்கத்தினர்கள் செய்த உபன்னியாசங்கட்கு--அபிப்பிராயங்கட்கு---பதில் சொல்லும் முறையில், முதலில் [தமது] இலகாவைப்பற்றி அங்கத்தினாகள அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பதை எடுத்துக் காட்டி—வேடிக்கையாக அல்ல — சகோதர அங்கத்தினர்கள் நிலவரி விஷயமாக விசேஷ கவனம் காட்டப்பட்டதே இதற்குக் காரணம் என்றும் எடுத்துரைத்திருக்கிறார். கல்வி சம்பந்தமாகவும், தாழ்ச்சிசம்பந்தமாகவும், எதிர்நோக்குவாக்குறுதிகள், கோக்கத்தை எடுத்துரைக்கக் கூடுமென்றுஎதிர்பார்த்தோர் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள் என்று சொன்னதிலும், கனம். எஸ். குமாரசாமி அவர்களின் சமாதானப்பிரங்கத்தின் முற்பகுதியில் பெரும் பாகம் இக்காட்டுபக்திமான்களுக்கு செலவிடப்பட்டதைக்கண்டு திடுக்கிட்டுப்போனும் இன்னும் பல வருடங்களுக்கமுன் மாகாணத்தில் ஆரம்பக் கல்வியை சீர்திருத்தி அமைக்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டதில், மிஸ்டர் சாம்பியன அவர்களின் ஆரம்பக் கல்வித்திட்டம் மிக முக்கியமானதாகும். இத் திட்டத்தில் திடமாறுதலாகாம் விரும் புவதுண்டெனினும் இத் திட்டம் முழுதும் அலக்ஷியப்படுத்தக் கூடியது அல்லது, நிறுத்திவைக்கவேண்டியது என்று சொல்ல எவரும் துணியார். ஆனால் கனம் கல்வி மந்திரியவர்கள் "சாம்பியன் திட்டமானது இன்னும் ஸ்தலஸ்தாபனங்களின் அபிப்பிராயம் கேட்பதிலேயே இருக்கிறது. இது கிடைத்த பின்னரே கவர்ன்மெண்டார் முடிவுசெய்வதாக இருக்கின்றனர்" என்று கூறிவிட்டார். இப்பதிலானது ஆரம்பக் கல்வியைப் பற்றியும், மில்டர் சாம்பியன திட்டத்தினுல்,சீர்திருத்த முறையில் அறிவாளிகளாக வெளிவரும் இளைஞர்கள்புடையதாக எதிர்காலம் இருக்க முடியுமா? என்பதில், நம்பிக்கைவைத்த நம்மை ஏமாற செய்துவிட்டது.

மிஸ்டர்-சாம்பியன் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள, ஆரம்பக் கல்வி திட்டத்தை அத் திட்டம் வெளியான தினத்திலேயே கண்டனம் செய்ய ஆர்ம்பித்துவிட்டார்கள். இக் கண்டனமோ மோமாபுரியைக் கூட எட்டியது எனலாம. இக கண்டனம் செய்தஅருகூட்டத்தாரின சௌகரியத்துக்காக ஓர் உயரிய திட்டத்தை கைவிடுவது தவறு என்பதுடன், அத் திட்டம் தயாரிக்க முதலில் இடமளித்த எந்திரத்தையும், அத்திட்டம் தயாரிக்கப்பட்டகாலத்தில், அதில சாகஸியம் கொடுத்த எண்ணற்ற பொறுப் பேற்றவர்களின் முயற்சியையும், அலக்ஷியப்படுத்துவதுபோல் கூடகனம் மந்திரியவர்கள் சமாதானம் இருக்கிறது என்பதையும் நாம் எதிர்த்துக் காட்டாமல் இருப்பதற்கில்லை.

இந்நாட்டில் உள்ள ஜனசமூகம் என்றால் அது ஒரு சிலரை நிர்க்கதியாப் பாராட்டி வரவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளவர்களோ, குறிப்பிடுவதல்ல. எதிர்க்கவர்களான அறிவிற் பெரியோர்கள் சொல்லும் காரணங்கள் தான் என்ன? சுருக்கமாக சொன்னால் எக்காரணத்திலோ, எடுத்ததற்கெல்லாம் கண்டனம்செய்வதற்காகஇப்போதறிவுமாகணத்தில் சிலர்கிளம்பியிருக்கிறார்கள். இவர்களின் செல்வாக்கு,கூடுதறவு ஆகியவைகளுக்காக பயந்து நமது மாகாண கல்வி மந்திரியவர்கள் நமது காலத்திலேயே இத் திட்டத்திலுள்ள உயரிய முறைகள் பலதை இலலாவிட்டாலும், சிலதையாவது, செய்யாமலே போகப் போவதிலையானும், இச்சமயத்தில இதை எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை.

சாம்பியன் திட்டம் அழலுக்கு வாக்கூடாது என்று கண்டித்தும் சர்க்காரை மிறட்டியும்,இதுவரையில் வெளிவந்த சகல செய்திகளையும் நாம் பார்த்தோம் அதில் அறிவின் வளர்ச்சிக்கு, ஜன சமூக வாழ்க்கையின் நன்மைக்கு, முறணுனதாகவோ, புறம்பானதாகவோ,எதுவும் திட்டத்தில்இருப்பதாகஎடுத்துக்காட்டுவதானகண்டனம் இல்லை. இந்நாட்டு எல்லா மகனும் தங்களை ஆதரிப்பதாக பிரமாண்டமான பொய் மூட்டை மீதே கண்டனகோட்டைகள் கட்டப்பட்டிருக்கிறது. இதற்காகவா நமது கனம் கல்வி மந்திரியவர்கள் மலைக்கப்போகிறார்கள்? இதைவிட திடுக்கிடக் கூடிய பல கண்டனங்கள் தோன்றிய போதெல்லாம் சமாளித்த மந்திரியாரிடம் நமக்கு நம்பிக்கை இல்லாமலில்லை. வீண்கூச்சல் எதற்கு என்று அலக்ஷியமாக பிரஸ்தாபதில் கூறப்பட்டிருந்தாலும்,எதிர்காலத்தில் தன் கடமையைத்திறமைபடச்செய்யகனமமந்திரியவர்கள் தவறுது இருப்பாராக.

கண்டனக் காரர்கள் சொல்லும் காரணங்களில் பிர்மாண்டமான காரணங்கள் என்னவென்று பார்ப்போம்.

(1) இன்று கல்விக்காக செலவிடப்படும்பணத்தைவிட மூன்று மடங்கு பணச்செலவாகும் என்பது;—

பணச்செலவு அதிகமென்பதில் இவர்கள் விடும கண்ணீர் வாஸ்தவமானால் தங்கள் தர்மஸ்தாபனங்களுக்கு என்றுவரு டாவருடம் வாங்கும் இலக்ஷக்கணக்கான ரூபாவிலிருந்து சிறிது குறைத்து இக் கல்விதிட்டத்துக்குப் போட்டுவிடப் போகிறார்களா? என்று பார்த்தால் அது இன்று நடக்கக்கூடியதல்ல எனபதுடன், கண்டனக் காரர்கள் தங்கள் மதப்பிரசாரத்துக்கு எதையும் கையாளும் தந்திர முறையிலேயே முதலில் பணச் செலவு என்ற பேரால் கண்டனம் என்றார்கள் என்று சொல்லாம்.

(2) பிறப்பினால் உயர்வு தாழ்வு, மதத்தினால் உள்ள வித்தியாசம், மதத்தினால் உள்ள சலுகை இவைகளுக்கு தீங்கிழைப்பதாக இருக்கிறதாம்.

இவர்கள சொல்லும்,"தீங்கிழைப்பதாக இருக்கிறது" என்பவைகள் எத்தனை இலக்ஷம் ஏழை எளியச் சிறுவர்கள் ஆரம்பக்கல்வியை பெற முடியாது தடுக்கிறது எனபதையும், கல்விக்காகக் கொடுக்கப்படும் பணம்- அவர்கள் பேரால் சர்க்காரால் தாராளமாக செலவிடப்பட்ட போதிலும் அவை முழுதும் அவர்களுக்குப் போகமே மிஸ்டர் சாம்பியன் திட்டம் உதவி செய்யத்தூண்டுகிறது. என்பதிலும், இவர்கள் காட்டும கண்டனம் நியாயமுடையதாக இருக்க இயலுமா?

(1) ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆண், பெண் இருபாலரும் ஒன்றுக படிப்பது தவறு.

நமது மாகாண முதல் மந்திரியாக இருந்தவர்களில் இருவர்கள் மிஸ்டர் சாம்பியன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தும், பினபும் இம்முறையை ஆதரித்து இருக்கிறார்கள் என்றும், இதற்காக மந்திரிகளை மகாஜனங்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்றும் சொல்வதுடன் ஒரு முதன மந்திரியார் ஆரம்பக் கல்விச்சாலைகளில் மட்டுமல்ல உயர்தரப்பட்டம் பெறும் சர்வகலாசாலைகளிலும் இம்முறைகையாளப்படவேண்டும் என்றும, இன்னளை முறைமாறி புதுமுறையில் படிப்பும்,பள்ளியும் பாடமும வருகிற காலத்தில் உபாத்தினர்களாகவே சகலரும் நிறைந்திருக்கவேண்டும்என்றும்கூடசொல்லியிருப்பதைமட்டும் இங்கு ஞாபக மூட்டுகிறோம்.

இன்னளள கிறிஸ்துவகாலசாலையில் முகிய வகுப்புகளிலும, வைத்திய காலசாலையில் பல வகுப்புகளிலும், நகரங்களில் பெண்கள் ஹைஸ்கூல்கள் இலாத இடங்களிலும, கிராமங்களில் பெண்பள்ளிக

கூடங்கள் இல்லாத இடங்களிலும் கிராமங்களிலுள்ள கிறிஸ்துவபாட சாலைகளுக்குச்சென்றால் பெண்கள் கிறிஸ்துவமதத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்ற பயமுள்ள இடங்களிலுமுள்ள கல்விச்சாலைகளில் பெண்களை—கிறுமிகள் சென்று கல்விகற்று வருகிறார்களா? இல்லையா? என்றுமட்டும் வினவுகிறோம்.

4. ஜனக்குறைவால் ஒருமதத்தார் தற்காலம் ஓர் சிறிய பாடசாலையை ஸ்தாபித்தது, பின்னர் ஜனங்கள் அதிகரிக்கும் போது,பாடசாலையை மென்மேலும் விருத்தியாக்க, மேல்வகுப்புகளுக்கு சர்க்கார் அங்கீகாரம் கிடைக்க இடமில்லை என்பது.

இதில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுவது என்பது மக்களின் கல்விக்குறையை நிவர்த்திப்பதற்காகவா? அல்லது ஜனக்குறைவாக உள்ள மதக்காரர்கள் பள்ளிக்கூடம் வைத்து அதன்மூலமாக மதத்தைவளர்க்கப் பள்ளிக்கூடங்களா?

எம்மதம் குறைய ஆரம்பிக்கிறதோ அவர்கள் பணத்தைக்கொண்டே, குறைவுபட்ட எண்ணிக்கையுள்ள மதம் பருகவேண்டுமென்ற எண்ணமா? தணிமுறையில், என்று ஆரம்பிக்கப்பட்டுள்ள பல கிறு—மதப்பிரசார ஆரம்பகல்விச் சாலைகளில், மதமாறுதல், அகனல் குழப்பம், கலகம், உண்டாவதாலும், கிராமங்களிலிருப்போர் பயந்து பள்ளிக்குசிறுவர்களை அனுப்ப மறுக்கிறார்களென்ற குறையை நிலைத்திக்கச்செலசாம்பியன்திட்டமானது புதுமாறுதலை செய்ய எற்பட்டது.

முன் சொன்ன மொண்டி காரணங்களைக்காட்டி மிரட்டும் மதக்கிறுகர்களின் கண்டனத்தை பொருட்படுத்தாது, விரைவில் ஆரம்பக்கல்வி முறையில் தங்கள் கடமையைச்செய்ய மதான கல்வி எந்திராதயங்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம். ஸ்தலஸ்தாபனங்கள்மீது பழியைப்போட்டு அதன் மறைவில் எவறும் மறைய ஆசைபடுவது நியாயமாகாது.மதக்கிறுக்கர்களின் கண்டனத்தை மட்டும சர்க்கார் பெரிது படுத்தினதாக பொதுஜனங்கள் உணர்ந்தால் அவர்களும் தங்கள் கண்டனங்களை சர்க்காருக்கு எடுத்துச்சொல்லி சர்க்கார் கடமையைச்செய்தொழிக்குமாறு சர்க்காரை கேட்டுக் கொள்ள பொதுஜனங்களுக்கு தெரியுமேயாயினும், சர்க்கார் அதுவரையில் இதை வளரவிடக் கூடாதென்றும், எடுத்ததற்கெல்லாம் மதநிருப்பதாகக் கூறும் பரிதாபத்துக் குரியவர்களிடம் கோபம் கொள்ளாமலும், அவர்கள் கண்டனத்தைக்கண்டு அஞ்சாமலும், தாங்கள் நியமித்த கமிட்டி, தாங்கள் விரும்பிய அறிக்கை இவைகளுக்காக செலவான பணம், இவைகள் அத்தனையையும் அலட்சியப்படுத்திய வைதீகர்களிடம் அலட்சியத்தைக் காட்டி, ஆரம்பக் கல்வி திட்டத்தில் சர்க்கார் தங்கள்கடமையைச் செய்ய தவறுதென்ற எண்ணம் எங்கும உண்டாகச் செய்ய கேட்டுக்கொள்ளுகிறோம்.

தஞ்சை
சுயமரியாதை சங்க
முதலாவது ஆண்டுவிழா.

தஞ்சை சுயமரியாதைச் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா சென்ற 17,18 உ சனி, ஞாயிறுகளில் தஞ்சை கிருஷ்ணலீலா தியேட்டரில் ஈரோடு "பிரசண்ட மாருதம்" ஆசிரியர் தோழர் இரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

உள்ளூர் தோழர்களும், திருச்சி, கும்பகோணம், காகபட்டணம் தாராசுரம், முத்துப்பேட்டை முதலிய வெளியூரிலிருந்து வந்த தோழர்களுமாக சுமார் 1000 பேர்கள் குழுமியிருந்தார்கள், பலர் சுயமரியாதைக் கீதங்கள் பாடினார்கள். தோழர் ஆளவந்தார் அவர்கள் தோழர் இரத்தினசபாபதி அவர்களைத் தலைவராக பிரரேபித்து டாக்டர் ராமச்சந்திரன் அவர்கள் ஆமோதிக்க தோழர் இரத்தினசபாபதி ஆசனத்தமர்ந்தார். சங்க அறிக்கையை தோழர் ஆளவந்தார் வாசித்தார். பின் தலைவர் முன்னுரையாக சுயமரியாதை இயக்கம் இத்தஎழெட்டு ஆண்டுகளாகச் செய்து வந்துள்ள வேலைகளைப் பற்றிக் குறிப்பிட்டு அதன் முடிவான லட்சியம், சமதர்மமே என்று குறிப்பிட்டார். பிறகு தோழர்களான காளியப்பன், நீலாவதி அம்மையார், ராமசுப்பிரமணியம், கே. வி. அழகர்சாமி ஆகியோர் முறையே, 'சமத நிலைமை' 'சுயமரியாதைஇயக்கம் மக்களுக்கு என்ன சொல்லுகிறது?' 'சுயமரியாதைக் கொள்கைகள்' 'சுயமரியாதையும் சமதர்மமும்' என்னும் பொருளைபற்றி அறிய சொற்பொழிவு நிகழ்த்தினர். 9-30 மணியோடு முதல் நாள் நடவடிக்கை முடிவடைந்தது.

மதுரான் முற்பகலில் ஜில்லாசங்க நிர்வாகஸ்தர்களின் கூட்டம் கூடி எதிர்கால வேலைத் திட்டங்களைப் பற்றி விவாதித்தனர். மீண்டும் மாலை 3-மணிக்கு ஆண்டுவிழா ஆரம்பமாயிற்று. பின் தோழர்களான, காளியப்பன், சாமி சிதம்பரனார், அ. பொன்னம்பலம், ஆர். அன்னபூரணி அம்மையார் ஆகியோர் முறையே சமத நிலைமை' 'சுயமரியாதை இயக்கமும் கலியும்' 'சுயமரியாதை இயக்கம்' 'சுயமரியாதை இயக்கமும பெண்மக்களும்' என்னும் பொருள்களைபற்றி விரிவுரைகள் நிகழ்த்தினர். இடையிடையே தோழர்களான இராவணதாஸ், சுப்பண்ணை மற்றவர்களும் சமதர்ம கீதங்களை பாடினர். இறுதியாக தலைவர் தனது முடிவுரையில், இளைஞர்களும் வயோதிகர்களும், எழை பணக்காரர்களும், முதலாளி தொழிலாளிகளும் எச்சரிக்கையோடிருக்கும் படிக்கும் இவர்களுக்கான ஓர் சோதனைக்காலம் அணையில் வருமென்றும், அதற்கேற்ற படி கட்டுத்திட்டமான மனத்தைச் சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தோழர் ஆளவந்தான் அவர்கள் அனைவருக்கும் வந்தனோபசாரகூற விழா 9-30மணிக்கு இனிது முடிவுற்றது.

திருப்பத்தூர் தாலூகா
சுயமரியாதை மகாநாடு.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா
முதலாவது சுயமரியாதை மகாநாடு
நாளது 1934-ஆம் மார்ச்சு-மீ 11-உ ஞாயிறன்று
காலை 9-மணிக்கு திருப்பத்தூர் தியேட்டரில் நடைபெறும்.

மகாநாட்டுத் திறப்பாளர் ஈரோடு தோழர்:—
R. அன்னபூரணி அவர்கள்.

மகாநாட்டுத் தலைவர் ஈரோடு தோழர்:—
டாக்டர் M. கிருஷ்ணசாமி அவர்கள்.

மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திருப்பத்தூர் தோழர்:—
நா. பள்ளிகொண்டான் அவர்கள்.

தமிழ்நாட்டுப் பலவான் சாண்டோ தோழர்:—
லெ. சோமசுந்தரம் அவர்கள்
உடற்பயிற்சி செய்துகாட்டுவார்.

மகாநாட்டுக்குத் தோழர்கள் கே. முத்துச்சாமி வல்லத்தரசு B. A., B. L. M. L. C., S. குருசாமி B. A., S குஞ்சிதம் B A., L. T.: எஸ். நீலாவதி ராம-சுப்பிரமணியம் A. ரெத்தினசுபாபதி (பிரசண்டமாருதம் ஆசிரியர்) S. R. M. வெங்கடாசலம், M. பொன்னுசாமி, ப. சீவானந்தம், அ. பொன்னம்பலம், ராம சுப்பையா, விசாலாட்சி, கே. வி. அழகர்சாமி, எஸ். வி. லிங்கம் முதலியவர்கள் வருகிறார்கள்.

மகாநாட்டுப் பிரவேசக் கட்டணம் கிடையாது.

இங்ஙனம்,
அ. முத்தையா, சி. முருகையா,
காரியதரிசிகள்.

[9-ம்பக்கத்தொடர்ச்சி]

றும் சர்வசமயமும் பொதுஉடைமையைத்தான் போதிக்கின்றன வென்றும்'சன்னி பிண்ணி'வென்று எதேதோ எழுதிவிட்டு முடிவாகப் பொதுஉடைமைக்காரர்கள் நாஸ்திகர்களென்று; அவர்கள் நாஸ்திகராகளென்று சொல்லிக்கொள்வதும் வீண் பெருமை" என்று திக்குத திசை தெரியாமல் எழுதுகிறது.

சமயத்திலிருந்து சமுக்கிழுத்தை தெரியவில்லை. பொது உடைமையை அலட்சியம்செய்யவும் துணிவில்லை. அதனால்தான் அற்பவிபாக்யானங்களும் இழிவான நிருபங்களும் தலைகாட்டுகின்றன.

[8ம் பக்கத் தொடர்ச்சி]

ரேண ஸகார்யோதன ஸஞ்சய; சூத்ரேண்தன மாஸாத்ய ப்ராஹ்ம மணைவபாததே) என்கிற ஸ்மிருதியின் வாக்கியபடி பொருளீட்டத் திறமையிருந்தாலும் சூத்திரன் பொருள் சம்பாதிக்கப்படாதே. சூத்திரனுக்குப் பொருளிருந்தால் பிராமணன் தூன்புறுவான் என்கிற தருமசாஸ்திரத்தை நீங்கள் தள்ளிவிட்டீர்களே.

"உச்சிஷ்டமன்னம் தாதவ்யம் ஜீர்ணானி வஸனானிச; புலறகாஸ் சைவதான்யானும் ஜீர்ணஸ் சைவ பரிசசதா" என்கிறஸ்மிருதியின் பிரமாணப்படிசூத்திரனுக்குமூன்று வருணத்தார்களுடைய மிஞ்சின எச்சில் சோறும், கிழிந்துபோன ஆடையும் தானியத்தில் பதருமே அல்லாமல்-சரிகைத்தலைப்பாகையும்,கோர்ட்டு சர்ட்டும், சேலம்வேஷ்டியும் சரம்பாரும், சம்பா அரிசியும் சாஸ்திரத்திலில்லையே. இன்னும் சொல்லுவதாலால் சூத்திரனை நீங்கள் வைத்துக்கொண்டிருக்கும் சுப்பிரமணியன் என்கிற பெயர்கூட வேதசாஸ்திர சம்மதமல்ல. "சூத்ரஸ்யது ஜுகுப்ஸிதம்" என்கிறவேதஸ்மிருதி விதிப்படி காதில் விழும்போதே அறுவறுப்பை உண்டுபண்ணத்தக்க பெயர்தான் சூத்திரனுக்கு இடவேண்டும். இதற்கெல்லாம் சாஸ்திரத்தை மீறிவிடுகிறீர்கள் வேதஸ்மிருதிகளில் சண்டாளன் என்கிற பதம் ஒன்று இருப்பதுதான் உங்கள் கண்களுக்குப்படுகிறது. உங்களை சூத்திரன் என்று சாஸ்திரத்தில் எழுதி இருப்பதுபோல தாழ்த்தப்பட்டவர்களை சண்டாளர்களென்றெழுதி யிருக்கிறது. நீங்கள் பார்ப்பாரதாசிமகன், அடிமை என்பதை ஒத்துக்கொள்ளுகிறீர்களா? இது கடவுளால் சொல்லப்பட்ட வேதவிதிதானே. இந்த இடத்தில் கடவுளையும் வேதஸ்மிருதி சாஸ்திரங்களையும் எப்படி நினைக்கிறீர்கள்? ஒத்துக்கொள்ளுகிறீர்களா? சண்டாளர் தீட்டைமட்டுங் கண்டுபிடிக்கஓடிப்பாய்கிறீர்களே. வேத சாஸ்திரம் யாரையெல்லாம் சண்டாளனுக்கு யிருக்கிறதென்பதை ஆலோசித்துப்பாருங்கள்.

"நசூத்ர ராஜயே நிவலேகந் தார் மிகஜனவ்ருதே; நபாஷண்டி ஜனகாந்தே நாபஸ்ருஷடேந் த்ய ஜேந்ருபே."

சூத்திரன் ஆட்சிபுரிகிற நாட்டில் பிராமணன் குடியிருக்கலாகாதென்றல்லவா வேதஸ்மிருதி சொல்லுகிறது. இதைநீங்களோ, உங்கள் கூட்டப்பார்ப்பார்களோ வேறு ஸ்மிருதி சொல்லுகிறீர்களா? அடிமையாகிய சூத்திரன் நாய்க்குச்சமானம் ஆகையால் சூத்திரனுடைய தொழிலைப் பிராமணன் ஜீவிக்கலாகாது என்கிற மனுவாக்குப் பிரகாரம் உங்களை நாய் என்றால் ஒத்துக்கொள்ளுவீர்களா? சேவகாவிர்த்தியை விட்டுவிடச்சொன்னால் பார்ப்பார்கள் கேட்பார்களா? உங்கள் சுகபோகங்களில் மட்டும் கடவுள் சொன்னவேதம் மனுசொன்ன ஸ்மிருதி, ரிஷிகள் சொன்ன சாஸ்திரம் இவைகளை அலக்ஷியமாகத் தள்ளிவிடுகிறீர்கள். இதனால் கடவுள் நம்பிக்கை வேதசாஸ்திர விஸ்வாசமோ இல்லை என்று ஏற்படவில்லையா? நீங்கள் வைத்துக் கொண்டிருக்கும் கடவுள் விஸ்வாசமும் வேதசாஸ்திர நம்பிக்கையும் மற்றவர்களை தூன் புறுத்தத்தான் வைத்துக்கொண்டிருக்கிறீர்களென்று விளங்கவில்லையா?

பிராமணனென்கிற பார்ப்பானும் சூத்திரனென்கிற நீங்களும் சேர்ந்துகொண்டு வீரமும் விஸ்வாசமுமுடைய ஒரு பெரும் சமூகத்தை சண்டாளனென்று சொல்லி தள்ளி அப்புறம் அன்னியமதத்திற்குத் துரத்திவிடத்தான் கடவுள் உங்களுக்கு சாஸ்திரம் சொன்னாரோ? மற்ற மதக்கடவுள்களெல்லாம் எல்லாரையும் சேர்த்துக் கொள்ளச் சொல்லுகிறது. நமது கடவுள் தன் மதத்திலிருப்பவர்களை அடித்துத் துரத்தச்சொல்லுகிறது. இப்படி ஒரு கடவுள் இருக்குமா? இருக்காது என்று சொல்லுகிறவர்கள் உங்களுக்கு நாஸ்திகர்கள். கடவுள் பேரால் மனிதனை மிருகத்திலும் கீழ்ப்படுத்துகிற நீங்கள் ஆஸ்திகர்கள். கடவுளைமுட்டாளென்றோ, அயோக்கியர் என்றோ ஆக்கிவைத்திருப்பது போதும். வேதத்தில் பிறவிச் சண்டாளர்கள் என்று நீங்கள் படித்த அடுத்த பக்கம் கர்ம சண்டாளனையும் சொல்லியிருக்கிறது. அது யார் என்பதையும் தெரிந்து பிரசங்கம் செய்யுங்கள். பிராமணன், சூத்திரன், சண்டாளன் இவர்கள் சம்மந்தத்தைக்கவனிப்போம்.

பிராமணதாசி மகன் சூத்திரன்--அதாவது பார்ப்பார ஆணுக்கும், மற்ற ஜாதிப்பெண்ணுக்கும் பிறந்தவன் சூத்திரன். சூத்திர ஆணுக்கும், பிராமணப்பெண்ணுக்கும் பிறந்தவன் சண்டாளனென்று வேத ஸ்மிருதி சொல்லுகிறது. பார்ப்பானுக்குசூத்திரன், மகன் பிள்ளை, சண்டாளன் தூன் பிள்ளைக்கும், மகள் பிள்ளைக்கும் இரத்தக் கலப்பால் விதியாசமென்ன? அதனால் சூத்திரனும சண்டாளனும் மாமன் பிள்ளை அத்தை பிள்ளையாய் சம்மந்தியாகவிருக்கிறார்கள் சூத்திரனுக்கும், சண்டாளனுக்கும் பார்ப்பார்கள் நேர்சம்மந்திகள். ஆகவே மூன்று பேர்களும் நேர் சம்மந்தியாகவிருக்கிறார்கள். ஹரிசன், ஸ்பென்சர், பயாஸ்கோப் முதலிய ஹோட்டல்களிலிருப்பவர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்களின் பேரப்பிள்ளைகளாதலால் அங்குபோவதில் பெருமையும், மரியாதையும் உண்டாகிறது. பேரப்பிள்ளைகள் விருந்து பாருக்குத்தான் ருஜிப்காது. மலையாளநாயர் பெண்களை, பார்ப்பார்கள் சம்மந்தம்வைத்து பிள்ளையை உண்டுபண்ணுவார்கள். மூத்திரம் எச்சில் மூதல் எந்தக்காரியத்திலும் தீட்டில்லை. அவள் தொட்ட கண்ணியைப்பலர் அறியக்குடித்தாலும் அந்தக் குழந்தையைத் தொட்டாலும் தீட்டு வந்துவிடும் என்பதுபோல், பேரப்பிள்ளைகளிடம் எல்லாம் பெற்றுக்கொள்ளலாம். அந்தப்பேரப்பிள்ளைகள் கோவில் வாசலை மிதித்தால் சுவாமி ஓடிவிடும். பாட்டன் மார்களெல்லாம் பாதாளம்போய்விடுவார்கள். இது என்னநீதி? இவர்களுக்குத்தான் பூர்ண சுயராஜ்யமோ?


இவர்கள் மூன்றுபேர்களின் இரத்தம் ஒன்றுக்கலந்திருப்பதாகவல்லவா கடவுளால் சொல்லப்பட்ட வேதஸ்மிருதிகள் சொல்லுகின்றன. ஆதிப்பிராமணி ஆணின் இரத்தம் தாத்தாயோ பிண்டாரியோ இமயகிரிக்கு வடக்கேபுள்ளவர் களுடையதோ யாருடையதோ நமகருத்தெரியாது. ஆதி சூத்திரப் பெண்ணுடைய இரத்தம் ஆதிராவிடனுடையதோ மலவாசிகளுடையதோ கண்ணியாகுமரிக் காட்டு இடும்பனுடையதோ நமக்குத்தெரியாது. சண்டாளர் என்று சொல்லப்பட்டவர்களின் தாய்தந்தையர்களின் இரத்தம் சண்டனியின் இரத்தம், வருணாச்சிரமிகள் இரத்தம் வேதஸ்மிருதிகளின் இரத்தம் இந்த இரத்தத்தை எக்கச்சக்கமாய்கலந்துள்ளதாகச் சொல்லும் நீங்களே சொல்லுங்கள். அந்த இரத்தம் போனவிடமெல்லாம் செல்வமும், செல்வாக்கும்கூடி விளங்குகிறதே.

ஈரோடு ஆரூவது வருஷ
எங்மென்பூனியன்

கால்பந்து விளையாட்டு.

1934-ஹு எ ல்-மீ இ ண் டாவது வாரத்தில், எங்மென்பூனியன் கிளப் ஆதரவில் கால்பந்து விளையாட்டு ஒன்று (Foot-Ball Sevans நடைபெறும். இதற்கு நமது பாகண்ட முழுவதிலுமுள்ள கிளப்களை விளையாட அழைத்திருக்கிறோம். 50 வயதுக்கு அப்பால் இருக்கும் வருஷங்களுக்கு சாப்பாடு வசதியும், ஜாலி வசதியும் இலவசமாக அளிக்கப்படும். மேலும் ஒன்றுக்கு ரூ 4.0.0 ப்ரவேசக்கட்டணம் அனுப்பவேண்டும். 31-3-34 க்குள் பணமும் விண்ணப்பமும் சேர்த்துவிட வேண்டும். மேற்கொண்டு பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்களும், பணம் இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் ஆலோசனை கவனிக்கப்படமாட்டா. இது சம்பந்தமாக விஷயம் தெரிந்துகொள்ள விரும்பும் பூம்கார் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதித தெரிந்து கொள்ளவும்.

E.K. Abdul-Kareem Sahib,
Salt Merchant, Erode.



'சுந்தரி ஸ்னோ.'

ஒரு சுந்தரிஸ்னோ வாங்குவோருக்கு ஒரு கைத்துட்டை இனும்.

சுந்தரி ஸ்னோ தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வது தோடு முகத்தில் உண்டாகும் வர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது நிறமணம் கமழ்வது. விலை மலிவானது.

ஏஜண்ட :- K. V. R. A.
அலடக்கப்ப செட்டியார்
52-பந்தர் தெரு, சென்னை.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு மைல் தூரம், தான் ஓட்டகத்தில் ஏறி வருவதாகவும், ஓட்டகை ஓட்டி அந்த ஒரு மைல் தூரமும் ஓட்டகை யைப்பிடித்துக் கொண்டு நடந்து செல்லவேண்டும் என்றும் பின் னர் சர்வாதிகாரி அபூபக்கர் அவர் கள் ஓட்டகையைப்பிடித்துக் கொண் டு செல்ல ஓட்டகை யோ ட்டி ஓட்டகைமீது ஏறிச்செல்ல வேண்டும் என்றும் பேசிக்கொண்டு அவ்வாறே ஓட்டகையோட்டியும் அபுபக்கரும்மாறி மாறி ஏறிச்சென்ற னர். அவர்கள் போக வேண்டிய ஊரின் பக்கம் வந்ததும் ஓட்டகை ஓட்டி ஓட்டகைமீது ஏறிச்செல்ல வும் சர்வாதிகாரி அபூபக்கர் ஓட்ட கையைப் பிடித்து முன் நடந்து செல்லவும் நேர்ந்தது. அவ்வூர் ஜனங் கள் எல்லோரும் பார்த்து பெரும் வியப்படைந்தார்கள்.

இவ்வித சர்வாதிகார முறையே இன்று சமதர்ம நாட்டிலே நடைபெற்று வருகிறது.

இஸ்லாத்தை நன்கு நுணுகி ஆராய்ந்து பார்த்தால் சமதர்ம அல் லாவாதத்தின் மேலே கட்டப் பட்டி ருந்தும் பின்னுள்ளோர் பலர் அச் சமதர்மக் கொள்கையினின்று இஸ் லாத்தை மாற்றி விட்டார்கள். என் பதும் நன்கு புலனாகும். இயற்கை வாதியாகிய சர். ஸையத் அஹமத கான் அவர்கள இஸ்லாம் இயற் கை நெறியென்றும் இஸ்லாமியவேத ங்கட்குஎவ்வாறுபொருள் கொண்டா ரோ அதே போன்று சமதர்ம வாதி யொருவன் குர் ஆனிற்கு பொருள் கூறினால் பெரும்பாலும சமதர்மத தி ற்கு ஆதரவுகள் அதிகம் காணலாம். ஆனால 1300 வருடங்களுக்கு முன் னர் அஸ்திவாரமிடப்பட்ட சமதர்ம இயக்கம கால தேச வர்த்த மானங்க ளுக்கேற்ப பல மாறுதல்களுடன் கார்ல் மார்க்ஸ் என்னும் அறிஞரால் எழுதப் பெற்று இன்று ரஷியாவில் கடை முறையில் அனுஷ்டித்துக் காட்டப் பட்டு வருகிறது. அச்சம தர்ம ஆட்சி நெறியில் ஒருவனுக்கு பொய்சொல்லவும் களவு செய்யவும, பொறுமைப்படவும், விபசாரம் செய் யவும் இன்னும்பல தீமைகளைச்செய் யவும் அவசியமில்லை, போராசை யால் தவறுகிறவர்களுக்கு நபிகள் நாயகம் அவர்கள் காலத்தில் விதித் தது போன்ற கடுந்தண்டனை விதி க்கப்பட்டு வருகிறது.

இசசமதர்ம ஆட்சி முறை யே உலகம ஏற்றுக்கொண்டால் தான வேலையிலலாத் திண்டாட் டமும், வறுமையுமொழிந்து உலகம் சாந்தியடையும் என்ற அறிஞர் பெர் ணட்ஷா மொழிந்து வருகின்றார்.

அதே பேராசிரியர் பெர்ணட்ஷா முஹமத நபியைப்போன்ற மனிதர் சர்வாதிகாரப்பதவியை ஏற்றுக்கொ ண்டால், உலகம் பெரிதும் விரும்பும் சாந்தியையும் சமாதானத்தையும் உண்டாகக், கூடுமென்றும், வருங் காலத்தில் இஸ்லாமே உலக மதமாய் விளங்கும் என்னும் கருத்துப்பட எழுதி வருவதிலிருந்து அவர் கூற வது இஸ்லாமே சோஷிய விஷம் என்ற எண்ணத்தின் மீது என்று கூறுவதில் தவறுண்டோ? அஃதன்றி தற்காலம் காணப்படும் தனிவுட மைகொண்ட இஸ்லாத்தையே அவர் குறிப்பிடுகிறார் என்று எவரே கூற வல்லார்!

இதை ஆதரித்தே "தென்னூட்டு ஒரு முஸ்லிம்பத்திரிகைகூட, "இஸ் லாமும் சோஷலிஸமும்" என்ற தலைபங்கத்தின் கீழ் "இக்கால முக லாளிச் சமூகத்தின் கொடுமைகளை யறிந்தவர்களே போன்று அந்தப்பே ரிய வளந்தா ஸோஷலிஸ்ட் (பொது உடமைக்கட்சி பினர்)மன்பதைகளுக்கு எச்சரிக்கை செய்கின்றார்கள். என்ன மகத்தான தீர்க்க தரிசனம்! ருஷ்ய சக்கரவர்த்தியும் அவருடைய பல பிரபுக்களுமடைந்த தண்டனையே மேற் கூறப்பட்டுள்ள திருவாக்கியத் தின் உண்மையை மெய்ப்பித்து நிற் கின்றது உலகத்திலுள்ள ஒவ்வொரு முதலாளிச்சமூகமும் இந்தத் "தன் பமனிக்கும் தண்டனையை" எதிர்பா ர்த்து நடுநடுங்கிக்கிடக்கிறது. "போ ல்ஷ விஸம்" என்பது என்ன? இது அராபியா தீர்க்கத்தரிசி மொழிந்த தண்டனையின் ஓர் அறி குறி யன்றோ?

இஸ்லாமியக் கிரந்தங்களில் "தஜ் ஜால்" எனக்கூறப்பட்டிருக்கும் அபா யம் இந்த முதலாளிச் சமூகத்தைப் பற்றியதாகும் "தஜ்ஜால்" என் பது ஒரு கம்பெனி ஒரு சங்கம் முத லிய உற்றிற்கு அடிப்படையான நபர் களின் கூட்டத்தைக்குறிக்கும். இந் தக்காலத்தைக் கூட்டுக்கம்பெனிகள் காலமெனக் கூறலாம். ஆகவே எந்தச் சாதாரண மனிதனும் தஜ் ஜால் என்னும் பதம இக்காலக் கம்பனிகளைப் போன்ற வற்றை எதிர் பார்த்தே கூறப்பட்டதென்ப தை யறிக தற்கால மேலுட்டு நாகரீகத்தின் முக்கிய அம்சங்களுக் குள் பெரிய வியாபார க்கம்பெனியு மொன்றாகும். ஏராளமான பணத்தை மூலதனமாகக கொண்டு இக் கம்பெ னிகளால் மனித சமூகத்துக் கேற்ப ட்டுவரும் இன்னல்களை எடுத்துக் கூறவேண்டியதின்று பணம்! பணம்!! அதிகப் பணம்!!! இதுவே இந்தக் கமபெனிகளின் இறுதி லக்ஷியமாக இருப்பதால் பொதுமக்கள் அடிமை களாயும் கேவலமான அடிமை களாய்ப் போய்வருகின் றனர். இந்தக் கம்பெனி வியாபார முறையில் ஆண்டவனது பிரதி பிம்பமாய் விளங்கும் மனிதன் பணமென்ற பலி பீடத்தில் தன்னை த் தியாகஞ் செய்து கொள்கிறான். முப்பத்துமூன்றுகோடி இந்திய மக்க ள் அடிமைபட்டிருப்பது இந்தியாவு க்கு முதன் முதல் வந்த தஜ்ஜாலான கிழக்கிந்தியக் கம்பெனியினா லன்றே? இந்தக்கம்பெனி இந்திய பூமியில் காலடிவைத்தது முதற் கொண்டு நாட்டில் ஏழைத்தன்மை யும் பஞ்சமும் அடிமைத்தனமும் குடிகொண்டு விட்டன.

"முதலாளிகளின் பலத்தால் பொ துமக்கள் ஈவிரக்கமின்றி நசுக்கு ண்டு வருவதை எதிர்த்து நிற்பதே சோஷியலிசமானால் பின் இஸ்லா மும் அத்தகைய கொள்கையுடைய தே. நாம் பணமென்பது தன்னள வில் தீமையை விளைவிப்பதன்று... ..." "ஸோஷியலிஸமா? முதலாளிச் சமூகமா? எது வெற்றி பெறுமென வினவப்படலாம். ஸோஷியலிஸத்தி ன்டக்கல்சத்தியமிருப்பதால் அதுவே இறுதியில் வெற்றியடையுமென நிச் சயமாய்க் கூறலாம். ஸோஷலிசத்து க்கு அடிப்படை மனிதன்; முதலா ளிசமூகத்துக்கு அடிப்படை பணம், எனவே பணத்துக்கும் மனிதனுக் கும் நிகழும் போரில் இறுதியில் மனிதனே வெற்றிபெறுவதில் என் னசந்தேகம் உளது. பணக்கார சமூ கத்தை துன்பங்களும் தண்டனையும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. இஸ்லாம் மனிதன்ப ங்கிலிருப்பதே போல் இஸ்லாத்தின் தெய்வமும் அவன் பங்கிலேயிருக்கின்றது.

எனவே இஸ்லாம் என்பது ஸோ வியத் கொள்கையைக் கொண்டே அஸ்திவாரமிடப்பட்ட சென்றறியெ ன்றும அஃது பல சுயநலவாதிகளா லும் புரோஹிதப் புல்லர்களாலும் தங்கள் தங்கள் சுயநலத்திற்கு ஆக ராய்த் திரித்து பொருள் கூறப்பெ ற்று அதன் உண்மையான ஜோதி மங்கிப் போய்யிருந்தது. இனி அத ன் உண்மைப் பிரகாசத்தை உலகி ற்கு விளக்தம் காலம்வந்துவிட்டது. ஆகலால் அச்சமதர்ம ஒளியை உலகி றகுக்காட்ட முஸ்லீம் புவர்காள்! முன்வருவீர்களாக.

[முஸ்லீம் வாலிபர்காள்! உங்களின் பொதுவுடமை—சமதர்ம சாந்திநெறி செழிக்கச் செய்ய முன்வருவீர்களா? இன்றேல் சுயநலப்புரோகிதர்கள்— முதலாளிகள், மிராசதாரர்களின் தனிவுடமை ஆதிக்கத்தால் ஏழை கள், தொழிலாளர்கள், பெண்கள் இன்னலுற்று கைந்து, உடையும் உணவும், குடிசையுமற்று மண்டு மடிந்துபோகும் கோரக்காட்சையு ன்னும்கண்டு களித்துக்கொண்டிருக் கப் போகின்றீர்களா? உலகத் தொ ழிலாளர்காள்! சர்வ மதபுவர்காள்!! உங்களின் வேற்றுமைகளை யொழித் தீங்கள் யாவரும் மனிதர்களென்ப தையுணர்ந்து ஒன்றுகூடி சமத்தம ஆசியைக்காண முனவருவீர்களாக.

உண்மைநாடுவோர் சங்கம் சென்னை.

சென்னை புரசை வெங்கட்டம்மாள் சமாதிரோட் கார்ப்பரேஷன் மைதா னத்தில் 25-2-34 ந்தேதி மாலை 4மணிக்கு தோழர் சே. எம். பார்த்த சாரதி அவர்கள் தலைமையில் தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர் கள் ஷை சங்கத்தை திறப்புவிழாவாற் றுவார்.

உத்திரவாதமுள்ளது.

கியாரண்டி கொடுக்கப்படும்.

எவ்வித மர்ம்து சாப்பிட்டும் தீராத வியாதிகள், குஷ்டம், கூயம், நீரழிவு, குனமம், இருந்தால் இதில் அவையெ குணமாகும். இதரவியாதிகளுக்கு எல்லா ஔஷதங்களும் கிடைக்கும்.

தாம்பர பஸ்பம் அனுபானத்துடன் ½ மண்டலம் ரூ. 25.


ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

தாளக பஸ்பம் அனுபானத்துடன் ½ மண்டலம் ரூ. 25.

ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

ஆர். எம். நாராயணசாமி,

தன் மந்திரி வைத்தியசாலை, பழனி.



"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர் களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினால் தயாரிக்கப்படுவது, வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஏஜண்ட்கள் தேவை.

பானியால் கம்பெனி "லெனின் அவென்யூ," தியாகராய நகர், சென்னை.

(6-பக்கத் தொடர்ச்சி)

மதக்களுக்கு இந்த ஞானம் தெரியா. தத்துவஞானிகள். இந்தஞானத்தை அறிந்திலர் பூக பௌதிக மெஞ்ஞானிகள் இந்த ஞானத்தை உணர்ந்திலர் அரசரும் அமைச்சரும் இந்த ஞானத்தை தெரிந்திலர். எங்கள் சொத்து உங்கள் சொத்து, எங்கள் நாடு, உங்கள்நாடு, எங்கள் ஆயுதம் உங்கள் ஆயுதம், எங்களு கிலா, மென்று வீண்வாதம் புரிந்து வந்தனர் களேஒழிய,உழைப்பவனுல்தான் எல்லாவித உலக சுகபோகங்களுக்கும் உலகம் உரித்தானது என்று உணர்ந்தாரில்லை. இந்த உண்மையை உணராது கோவில் கட்டியுமென்ன, குளங்கள் வெட்டியுமென்ன கடவுளை வணங்கியுமென்ன? காத்தலை வெறுதுமென்ன? தத்துவமிகி என்றால் என்ன? தத்+தவம்+அகி என்றாலும்ன்ன? வேதங்களைப்படித்தும்மென்ன? வேதங்களைப் பேசியுமென்ன? பூசைகள் புரிந்தும்மென்ன? பலிகள் போட்டுமென்ன! போரிட்டுமென்ன? சமாதானம் பேசியுமென்ன? இத்தகையமூட முயர்ச்சியால் பிரப்புப்பிணி, மூப்புதசாக்காட்டால் வரும் உலகதுன்பங்களை எவ்விதம் விளக்க முடியும்? இந்த உலக வறுமைபின் பிறதுவை, அதாவது, காரணத்தை விஞ்ஞான வாயிலாக முதலில் உலகத்திற்கு காட்டியவர் கார்ல் மார்க்ஸ் என்பார்.

காரல் மார்க்ஸ் சரித்திரச் சுருக்கம்.

காரல்மார்க்ஸ், Revolutionary scientific socialism, அதாவது புரட்சி விஞ்ஞான சமதர்மத்திற்கு, ஆதிகர்த்தா. அவருடைய சமதர்மத்துவத்தை பலவேறுபட்ட சமதர்மிகள் ஆதாரமாகக் கொண்டுள்ளார். அது ஜர்மன் சமதர்மமாயிருந்தாலும். அல்லது ஆங்கில சமதர்மமாயிருந்தாலும், அல்லது ரஷ்ய சமதர்மமாயிருந்தாலும், இவையாவும் மார்க்ஸ் பெரியாருடைய தத்துவத்தின் மேல் கட்டப்பட்டிருக்கின்றன. வெவ்வேறு தேசத்திய சமதர்மம் மார்க்ஸினுடைய சமதர்மத்தின் மேல் செய்துள்ளரும பலவேறுபட்ட வியாக்கியானங்களும் விதண்டியாசமாகத் தோன்றினாலும் கருததில் [In essence] ஒன்றே.

காரல் மார்க்ஸ், 1818ம் வருஷத்தில், ஜெர்மனியில் பிறந்தவர். இவருடைய தாயதகப்பன் மார்க்ஸ் யூதர்கள். சிறு வயதிலேயே ஜெர்மனி பத்தசதத்தில் எவ்வளவு படிக்கக்கூடுமோ அவ்வளவும் படித்தறிந்தார். இவருடைய புரட்சி மனப்பான்மையால் ஜெர்மனி தேசத்து அரசாங்கத்தாரால் யாதொருவித உதவியும் பெற முடியாமற் போய்விட்டது. ஓர் ஜெர்மனிய பேப்பருக்கு தன்னுடைய அபிப்பிராயங்களை தெரிவித்து வந்தார். இருபத்தைந்தாவது வயதில் கல்யாணம் செய்துகொண்டு புருஷனும் பெண்ஜாதியும் இணை பிரியாது வாழ்ந்துவந்தனர். அதன பிறகு,

உழைப்பாளிகளுக்கே உலகம் உரியது.

பாரிஸ் தேசத்திற்கு சென்று அங்கு [illegible] [Proudhon] முதலிய பிரதம சமதர்மிகளுடன் கூடி இருந்தார்.

பிறகு தனக்கு ஆப்த நண்பனுகிய எங்கல்ஸ் [Engels] எனபவரை சந்தித்து கிறிஸ்து சமதர்ம தூல்களை பிரசுரித்து வந்தார். அவருடைய அபிப்பிராயத்திற்காக பாரிலிருந்து நாடுகடத்தப்பட்டார் இந்த நாளில் ஓர் பிரபல அறிக்கைபாகிய கமதர்ம கழகியின் அறிக்கை ஒன்றை (The communist Manifesto) தானும், எங்கல் சும் வெளியிட்டார்கள். இந்த அறிக்கை மேல் நாட்டு பாஷைகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு, உலக தொழிலாளர்களுடைய மனதை கவர்ந்துகொண்டது. இறுதியாக ஆங்கில நாட்டிற்குச் சென்று, தன் ஆயுள்காலத்தை ஆங்கில நாட்டிலேயே கழித்துவந்தார். பல வருஷங்களாக உலகங்களுக்கெல்லாம் பெரிய புத்தகசாலையான பிரிட்டிஷ் மியூசியத்தில் சமதர்மத்தைப் பற்றி விசாரித்ததின் யுனே னைது பிரபல நூலாகிய காபிடல் (Capital) பிரசுரித்தார். உலகத் தொழிலாளர்கள் போற்றி வாழ்த்த, 1895ம் வருஷத்தில், தனது குடும்பத்தினர் புடைசூழ தனது வாழ்வு முடிவடையப்பெற்றார்.

கார்ல் மார்க்ஸிற்கு முன்பு வழங்கி வந்த விஞ்ஞானத்திற்கு (Science) இந்த தத்துவம் உண்மை தெரியாமலிருந்து வந்தது விஞ்ஞானம், மானுஷனை அளவிப்பார்த்து, நமது பூமியைப்போல கோடி பாகு பெரிதான உலகத்தைப் பார்த்து வியப்புகொண்டது. அணுவுக்கும் கோடிபங்கு சிறிதான பரமாணுக்களைக்கண்டு சிகைத்து நின்றது. ஆனால் மனித சமூகத்தில் வறுமை வந்த காரணத்தையும் இல்லாமையின் காரணத்தையும், அவைகளைப் போக்கும் மார்க்கத்தினையும். தெரியாமல் தவித்து நின்றது. ஆந்தசமயத்தில் காரல மார்க்ஸ் தனனுடைய வாழ்நாள் முழுமையையும இந்தவிசாரணையில் செலுத்தி, உலகப் பொருள் யாவும் உழைப்பவனுல் உண்டாக்கப்பட்ட படியால, உழைப்பவனுக்கே உரிய தென்ற, மாபெரும உண்மையை தனது சிறப்பு வாய்ந்த காபிடல்[Capital] எனற நூலில எடுத்துரைத்தார். இதைத் தான் Scientific Socialsm அதாவது விஞ்ஞானசமதர்ம மென்று வழங்கப் படும். இனி இந்த விஞ்ஞான சமதர்மத்தின முகிய இலக்கணத்தை கண்டறிவோம.

உலகப் பொருள்கள் தொழிலாளியால உண்டாக்கபடுவதோடுதொழிலாளி செய்து வந்த உழைப்பை கொண்டே அந்தந்த பொருள்களின் விலை அளவிடப் பட்டதென்று குறித்தோம். இந்த தொழில் அந்தந்த பொருள்களின் மேல் செல விடப்பட்ட பிறகே. இயற்கைப் பொருள்களுக்கு விலை மதிப்புண்டானதையும் எடுத்துக் காட்டினோம். ஆகவின் பொருள் விலை அதனைச் செய்த தொழிலாளிக்கே உரியது என்று பெறப்பட்டது.

The Origin of Private Property.

இயற்கைப் பொருள்கள் தனி உடமைபான விதம்

ஒருகாலத்தில் அரசர்களும் மதமச்சர்களும், வர்த்தகர்களும், நிலசுவான்களும், உலகில் தோன்றுவதற்குமுன், நிலம், நீர், காலமலை, எருக்கிரம், இரும்பு, வெள்ளி, பொன் சுரங்கங்களாயும் பொதுவாக இருந்து வந்தது. காடுகள், ஆடுமாடுகள், கோழி, புல் இனங்கள, மீன்கள முதலி உணவுப்பொருள்கள் வேட்டையாடப் பட்டு அவனவனுக்குக் கிடைத்த உணவை அவனவன் உபயோகப் படுத்தி வந்தான். ஜன சமூகம் பெருகவும் அரசர்களும், மதகுருக்களும், மற்றும் காரர்களும் தோன்றி, உழைப்பாளிகளை மூட மதக் கொளகைகளில் ஆழ்த்தி, அந்தந்த கிராமத் தலைவனை கடவுளுக்கொப்பிட்டு அவர் கிராமங்களையும், அவர் கிராம ஆடு மாடுகளையும். அவர் நாட்டு மக்களையும் சொல்லில் வென்று அடிமைகளாக்கி நாடென்றும் நகரமென்றும் உண்டாக்கிக் கொண்டு பிறகு. தான் கொள்கிதன்றும், அவைக்கள் கொள்ளதென்றும், வணிகன் கொள்கிதென்றும் வேற்றுமைப்பட்டு, நான் என்ன வென்றதெல்லாம் தனி உடமை உலகில் ஜனித்தது. இந்தகாலத்தில் நிலமும் நீரும் பொதுவாக்கி பாவிக்கப்பட்டிலந்தன. மத வைபவங்களும் வலுக்க வலுத்து, அரசன் ஆதிக்கம் வலுக்க வலுத்து. அரசர் நாடுகளை விரிவடையற்ற ஆரம்பித்தனர் தேற்ற நாட்டாரை அடிமைகளாக்கினார். மற்ற அடைந்த தேசங்கள் [The Conquerors] தோன்றி அடைந்த நாடுகளையும், அடிமைகளையும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு, தங்கள் தங்கள் பங்கிற்று வந்த நிலங்களை, அடிகைகளைக் கொண்டு பயிரிட்டு அதன் விளைவை அவர்கள் சொந்தமாக அனுபவித்து வர நேர்ந்தது. இவ்விதமாகத்தான் நிலத்திலும், நீரிலும், ஆடுமாடுகளிலும், ஆதியில் தனி உடமை ஏறட்டது. இத்யாதி காரணங்களால் [Proudhon] புரூடன் என்ற சமதர்மி, "Property is robbery" அதாவது சொள்ளையடிக்கப்பட்ட தென்

ரூர். இந்த அதிசயமான கொத்தி லிருந்து பிரிந்தவை, எல்லா தனிசொத்துகளுமேயாகி. இந்த ஆதி அடிமைத் தொழிலாளிகளிலிருந்து தற்கால தொழிலாளிகள் உதித்தனர். அடிமைகளுக்கு உழுது பயிரிடவும் ஆடுமாடுகளை மேய்க்கவும், மீன்களைப் பிடிக்கவும், மாடுகளை வெட்டவும், கொடுத்து வந்த சொற்ப உணவே தற்கால தொழிலாளர்கள் பெரும் கூலி [Wages] யாகும்.

கால நிகழ்ச்சியில் பெரிய பெரிய பட்டணங்கள் உண்டாயின. வர்த்தகத்தால் வறுதனை ஏற்றுமதி இறக்குமதிகள் அதிகரித்தனபோக்குவரத்து விருத்தி யாயின. உலகம் இவைகளைப் பெறவும் நாகரீகம் உதித்தது

பண்டை காலத்தில் உண்டாக்கப்பட்ட பொருள்கள் இலவே. நாகரீக விஜயத்தின் பயனை, பல கோடி பல்லாயிரம் பொருள்கள் உண்டாக்கப்பட்டன ஆதிகாலத்தில் ஜனக்கூட்டம் குறைந்திருந்தபடியாலும் செய்யும் பொருளை சொற்பமாய் இருந்தபடியாலும், பண்டமாற்றம் [Exchange] வழங்கி வந்தது. அதனுல் பிகாடி பொருள் உண்டானமையால், பண்டமாற்றுதல் முடியாமற் போய் விட்டது. ஆகவின் பொருள்கள் விளைவோப்படவேண்டி இருந்தபடியால், அந்தப் பொருள்களுக்கு விலை மதிப்பு ஏறப்பட்டது. ஒரு வஸ்துவை செய்ய பிடிக்கும் சிரமத்தை அளவுகொண்டும், தொழிலின் திறமைக்கும் [Skill] தக்கப் பொருள்களுக்கு விலை ஏற்பட்டது. இதுதான் நமக்கு வேண்டிய பொருளுக்கு நாம் கொடுத்து வாங்கும் விலையாகும். இந்த விலை, தொழிலாளிகளின அந்த பொருளைச் செயயப்பிடித்த சிரத்தினும், செயத திறமைக்கும் ஏற்படுகின்மானமாகும். இதைத்தான் மார்க்ஸ் என்பார் [Surplus value] சர்பிளஸ் வால்யூ என்றார். அதாவது நிலம், நீர், மற்றும் பல சொந்தமுள்ளதாக நாம் கொடுத்துவரும் விலை எனவும் நியாயமான பொருள்களை ஆதியில அபகரித்ததின் காரணமாக, தற்கால செல்வக்காரர்களனைவரும், முதலாளிகளென்றும், உடையவர்களென்றும் தங்களை நிலைநிறுத்திகொண்டனர். இந்த நிலங்களையும், நீர்களையும், மற்றும பலவிதப் பொருள்களையும விலைகொடுத்து உண்டாகியவைகளை, தொழிலாளர்களனைவரும், (Wage slaves) வேலைக்காரர்களாகவும் (Servants) படைத்தனை ஆட்களெனவும், எழைகளென்றும் அழைக்கப்பட்டு வந்தனர். ஆகவே அடிமைகளுக்கு, அவர்களால் கொடுக்கப்படும் பொருள்களுக்கு அந்த முதலாளிகள் இடப்பட்டுக்கொடுத்த கூலியே ஆவர்களுக்கு வேலைக்கு சன்மானமாக (Wages) வழங்கப்பட்டது.

ஜனத்தொகை அதிகரித்தன. பட்

தொழிலாளர்கள்—விவசாயிகள் விடுதலைக்கு மார்க்கமென்ன?

டணங்கள் விசாலப்பட்டன. நாகரீக மக்களுக்கு வேண்டிய பொருள்கள் அதிகரித்தன. இவ்விதமாக அதிகரித்துவரும் விஷயங்களால், (Events) ரயில்வேசாலைகள், கப்பல்சாலைகள், மற்றும் பல கோடி தொழிற்சாலைகள் தோன்றின. நாட்டுப் புறங்களில் விளைவு குறையவும், பட்டணங்களில் கூலி அதிகரிக்கவும் கோரிட்டபடியால், பயிர் வேலை செய்து பிழைத்து வந்த விவசாயிகள் பட்டணத்தை நோக்கி திரள்திரளாக வந்தனர்.

வேலை சொற்பமாக இருக்கும் போது, சொற்ப கூலிதான் பெற்று வந்தனர். வேலை அதிகரித்து வந்த போது, கூலியும் உயர்ந்தது. ஆனால் ஒருவன் செய்யும் வேலைக்கு, வேலையற்ற 10 பேர்கள் போட்டி போட்டு வந்தபடியால், இதுதான் சமயமென்று முதலாளி கூலியைக் குறைக்க ஆரம்பித்தான். வேலை செய்யும் தொழிலாளியும், வேலையில்லா தொழிலாளியும் இந்த கொடுமையான போட்டியால் (Competition) வறுமையாலும், நோயாலும், அகால மரணத்தாலும் மாண்டு வருகின்றனர். இந்த போட்டியைக் குறைக்க, தொழிலாளர்கள் தத்தம் தொழில் சங்கங்களால் (Trade Unions) தங்களுடைய உரிமையைக் காப்பாற்ற ஒன்று கூடினர்.

தொழில் சங்கங்கள் உண்டாவதற்கு முன், தொழிலாளர்கள் பட்ட பாட்டை சற்று நோக்குவோம். தொழிலாளர் அந்தக்காலங்களில் 10மணி நேரம் 12 மணி நேரம் வேலை செய்தனர், 5, 6, வயது பிள்ளைகளும், பெண்களும் இரவெல்லாம் வேலைசெய்ய நேர்ந்தது. பேராபத்துகளுக்குட்படும் தொழிலாளர்களுக்குயாதொரு வித பரிகாரமும் கிடைக்கவில்லை. சில தொழிற்சாலைகளில் சிறுவர்கள் உறங்கினால், அவர்களை அடித்து எழுப்பி, வேலை செய்ய வைத்தனர். கொடுக்கும் கூலி போதாதென்றால், கேட்பாஸ் கொடுத்து தொழிற்சாலையை விட்டுத் தெருவில் தியங்கத்தள்ளப்பட்டனர். தொழிலாளிகள் இருப்பிடமெல்லாம் அழுக்கும் காற்றமும் நிறைந்திருந்தன. வீடில்லா தோஷத்தால் ஒரு அறையில் 10, 15 குடும்பங்கள் தங்கும் துர்ப்பாக்கியத்தை அடைந்தனர். ஆனால் சில பரோபகார சிந்தையுடைய தலைவர்களால் தொழிற்சாலை சங்கங்கள் உண்டாக்கப்பட்டு, தங்கள் தங்கள் ஆதிக்கத்தையும, சமத்துவத்தையும் பொருளாதார உயர்வையையும் அடைந்துகொண்டு வருகின்றனர்.

விவசாயிகள் கதி என்னவாயிற்று? பயிரிட்டுப் பிழைத்துவந்தோருக்கு போதுமான ஜீவனம் கிடைக்காமையால் நிலமில்லாதோர் பட்டணங்களுக்கு தொழிற்சாலையில் வேலைசெய்யும் கூலி வண்டி, கட்டைவண்டி ரிக்ஷாவண்டி இழுக்கவும் சென்றனர். பயிர்செய்வதற்குப் போதுமான மக்கள் இல்லாமையால் வெள்ளாமையும் குறைந்தது. தத்தம் நிலங்களை சௌகாரிடமும், பொருளாளியிடமும், ஜமீன்தார்களிடமும் குதுவையோ அல்லது விற்பனையோ செய்து கடைசியில் நிலங்களை இழந்து கூலிக்காரர்களாக மாறினர். இந்தப் பெரும்பான்மை விவசாயிகள் பட்டணத்து தங்கள் தோழர்களைப்போல் விவசாய சங்கங்களை இன்னும் ஏற்படுத்தவில்லை. இத்தத் தோஷத்தால் நமது தேச விவசாயிகள் நிலைமை நிச்சயமில்லாமற்போயிற்று.

நிரம்பிகொண்ட மக்கள், பட்டணங்களில் ஏற்பட்டதொழிற்சாலைகளுக்குப்போய், உயிரைபிழைத்தால் போதுமென்று குறைந்த கூலிக்கு வேலைசெய்து வரவும், முதலாளிக்கு லாபம் நிரம்பிகொண்டது. இந்தத் நிரம்பிகொண்ட லாபத்தைக்கொண்டு இன்னும் தங்கள் செல்வத்தைத் திரளவைக்க முதலாளி அரசுகளும், பிரதேசங்களுக்கு தங்கள் சாமான்களை நல்ல விலைக்கு விற்கவும்; பிரதேச இயற்கைப் பொருள்கள் நிலத்தை சுலுவில் வாங்கவும் அவரவர்கள் ஜெயக் கொடியை பிரதேசங்களைக் கைப்பற்றி நாட்டிவந்தார்கள். இவ்விதமாகத் தங்கள் கொடிபோனவிடமெல்லாம் தங்கள் ஏகாதிபத்தியத்தை பலமற்ற தேசங்களிலெல்லாம் ஸ்தாபித்தனர்.

இவ்விதமாகத்தான் தற்காலஉலக வல்லரசுகள் யாவும் உற்பத்தியாயின. இத்தியாதி சரித்திரக் காரணங்களால் வல்லரசை நடத்தும் சிறுபான்மையோர் லக்ஷாதிபதிகளாகவும் கோடீஸ்வரர்களாகவும், கோடானு கோடீஸ்வரர்களாகவும் [Super Millioners] தற்கால உலகில் தோன்றியுள்ளார். இதே சரித்திரக் காரணங்களால் பூர்வ அடிமைகளாகிய தொழிலாளிகளும் [Wage Slaves] விவசாய அடிமைகளும் [Halots] தோன்றினர். உலகம் இரு ஜாதியாகப் பிரிந்திருக்கின்றது. சிறுபான்மை முதலாளி ஒருபக்கமும் பெரும்பான்மை தொழிலாளி மற்றொரு பக்கமுமிருந்துகொண்டு போராடிவருகின்றனர்.

தொழிலாளர், விவசாயிகள் தங்கள் தங்கள் ஏகதேச ஒற்றுமையால் ஒன்றுகூடி தங்கள் கூலியை உயர்த்திவர முயற்சித்துவந்தனர். கடந்த 50-வருஷங்களாகத் தொழிலாள விவசாயிகள் தொழிற்சங்க மூலமாக செய்துவரும் கிளர்ச்சியாலும், ஒற்றுமையாலும் வேலைநேரம் குறைந்தது. மற்றும் சிற்சில வசதிகளும் பெற்றார்கள். ஆனால் சுட்சிகொண்ட முதலாளி தனது அரசாட்சியின் வலுமையால் தொழிலாளர் கூலியை கோரிட குறைக்காமல் வேறு வழிகளால் குறைத்துவருகின்றான்.

நிலக் குடைக் கூலி.

வீடும் தானிய த்தின்மேல் [Land rent] நிலத் தீர்வையைப் போட்டு நன்றாய்விளைந்தாலும், விளையாவிட்டாலும் பேர்ட்ட தீர்வையை எந்தச் சமயத்திலும் வசூலித்துவருகின்றான். இதனை உணவின்மேல்போடும் வேறுவிதமான வரியென்று சொல்லுவர். [Indirect Taxation]. இந்த நிலத் தீர்வையைக் கொண்டு, சர்க்கார் ஒருபக்கம் தங்களுடைய சிப்பந்திகளுடைய சம்பளத்தை உயர்த்தவும் சேவகர்கள் ஜெப்பாய்கள் அமைக்கவும் மற்றும் சர்க்கார் விதித்த பல செலவுகளுக்கெல்லாம் செலவிட்டுவருகின்றனர், மற்ற நிலங்களில் விளையும் தீர்வைகளை நிலச் சுவான்தார்கள் தங்கள் மனம் போன போக்கெல்லாம் செலவிட்டு வருகின்றனர். ஆனால் இந்த நிலத் தீர்வை நியாயமாக விவசாயிகள படிப்பிற்கும், உணவிற்கும் நாகரீக வாழ்விற்கும் வேண்டிய கல்வி, சுகாதாரம், வைததியம், மருத்துவம் முதலிய வசதிகளுக்கு உபயோகப்படுத்தல்வேண்டும்.

வீட்டு வாடகை.

முதலாளிகள் கைப்பற்றிய பொருள்களாகிய மண், கல், மரம் முதலிய இயற்கைப் பொருள்கள்தான் அவர்களுக்குச் சொந்தம். ஆனால் தொழிலாளியின் கைபட்டமாத்திரதில் [The touch of the laborer] டங்களாக்களும், மாடமாளிகைகளும், வீடுகளும் உண்டாகின்றன. இயற்கைப் பொருள்களைக் கொண்டு தொழிலாளர் செப்பனிடப்பட்ட வீடுகளுக்கு தொழிலாளிகளுக்கு எவ்வித அக்கும் பாத்தியதையும் கிடையாது. ஆனால் வீட்டு வாடகை என்ற ஓர்வித வரியை வீடுகளுக்கு விதித்து, யார் வீடுகளில் வாசம்செய்கிறார்களோ அவர்களிடத்தில் வசூல்செய்கின்றான். இவ்விதமாக வசூலிக்கப்படும் வரியைக்கொண்டு முதலாளி [Land Lord] தனது மனம் போனபோக்கெல்லாம் செலவிட்டுவருகின்றான். ஆனால் இந்த வசூலிக்கும் வாடகை உண்மையில் தொழிலாளியைச் சேரவேண்டும். வீடில்லாத கோடானு கோடி உழைத்த மக்களுக்கு இந்த வசூலிக்கும் வரியைக்கொண்டு வீடு வசதிகள் ஏற்படுத்தவேண்டும். இதுதான் தர்மநியாயம்.

Tax On Commodities.
சரக்குகளின மேல்வரி.

இந்த இரண்டு வரிகளும் தொழி லாளி, விவசாயியின் வாழ்வுக்குறைத்து வருவது போதாமல் பூரண வாழ்விற்கு வேண்டிய வஸ்துக்களின் பேரிலும் முதலாளி அரசு [Capitalist Government] பற்பல வரிகளை விதித்துவருகின்றது. ஸ்டாம்பு, தந்தி, பத்திரங்கள், டீ, காப்பி, கெருப்புப் பெட்டி, சர்க்கரை புகையிலை, மருந்து, கண்ணாடி, கெடிகாரம், மின்சார சாமான்கள், ஆடுமாடு, கோரோசின் ஆயில், துணி மணி, பால், வெண்ணை, மெழுகுவத்தி, இரும்புசாமான், மரம், தட்டு முட்டு சாமான்கள்.[Furnitures] முதலிய வஸ்துக்களின்பேரில் வரியை வசூலித்து சேனைகளுக்கும் சிப்பந்திகளுக்கும் ஆளைக் கொல்லும் ஆயுதங்களுக்கும், அரசர் கோலங்களுக்கும், கௌன்சில் சேம்பர்களுக்கும், கல்லூரிகளுக்கும், கோர்ட்டுக் கொத்தளங்களுக்கும் செலவிடப்பட்டுவருகின்றன. இந்த அக்கிரம அநியாய வரிகளை வசூலிப்பதால் இவைகளை விற்கும் வர்த்தகர்கள் வஸ்துக்களின்பேரில் வரியை உயர்த்த ஏழைமக்களின் சொற்பக் கூலியிலிருந்து அதிகமாகச் செலவிட நேரிடுகின்றது. இம் மூலவரிகளால் தொழிலாளி பெற்றுவரும் சம்பளத்திலிருந்து அதிகமாகச் செலவிடவேண்டிவருகிறது. வரவர தொழிலாளியின் வாழ்விற்கு வேண்டிய போதுமான வசதிகள் வாங்க முடியாமற்போகின்றது. இவ்விதத் தொழிலாளியின் உழைப்பின் முழுப் பயனுகிய லாபத்தாலும் [Profit] நிலத் தீர்வையாலும், [Land Tax] வீட்டு வாடகையாலும் [House Rent] பலசாக்கு வரியாலும், Tax on commodities] தொழிலாளி அபகரிக்கப்பட்டு தோலும் எலும்புமாக நிற்கின்றான், ஆனால் முதலாளிக்கோ தொழிலாளி தனது உடலுடன் உயிர் தொத்திக்கொண்டிருந்தால் போதுமெனத் தனது அபகரித்தலை நீடித்து வரச் செய்கின்றான். [Who will help these unfortunate workers out of this inhuman universal exploitation.] இந்த மிருகத்தன்மையான அகில தேச அபகரித்தலிலிருந்து யாரால் தொழிலாளிகளின் துர்பல வாழ்வை நீக்கமுடியும். உலக வல்லரசுகள் இந்த அக்கிரமங்களைத் தீர்ப்பதற்கு எந்த வழியும் அவர்களுக்குத் தோன்றவில்லையாம். மதங்களும் இந்த அகிரமங்களைக் கவனிபபதாகக் காணேம்! தேசியவாதிகளாலும் இந்த அபகரித்தலை சிறுத்தமுடியவில்லை, இந்த அக்காரா இருளில்தான் உலகமக்கள் வாடி வதங்கி இன்னும் பல்லாயிரம் வருஷங்களுக்கு நின்று தவித்துக்கொண்டிருக்கவேண்டும்? இதற்கு வழி ஒன்றும் இல்லையா!

Futility of the State.
அரசுகளின் பயனின்மை.

ஒன்றை ஒன்று மற்ற பலவாகள் [Bourgeoise States]

ஏன் பண்டைகால ஆட்சிமுறை ஒழிய வேண்டும்?

அரசுகள், அதாவது முதலாளி அரசுகள். மேல் நால்வகையால் அபகரித்த (Exploited wealth) செல்வத்தைக்கொண்டு தேசீயக் காப்பிற்காக மூன்றில் ஒருபங்கு சேனைத் தளங்களுக்கும், ஆயுதங்களுக்கும் வருஷா வருஷம் செலவிடப்பட்டு வருகின்றன. இந்த ஒரு அக்கிரம செலவைக் கொண்டு 5-லக்ஷம் சுகாதார வீடுகள் 25-லக்ஷமக்கள் தங்கி சுகித்துவாழ ஒருவருஷத்திற்குக் கட்டிக் கொடுக்கலாம். இந்த அரசியல் வருமானத்தில் 8-ல் ஒருபங்கு அதாவது சுமார் 20-கோடியைக்கொண்டு சர்க்கார் சிப்பந்திகளுக்கு ரூ. 5000, 10000 கொடுக்கின்றனர். கிராமவெட்டிக்கு மாதம் ஒரு ரூபாயாம்! ராஜப் பிரதிநிதிக்கு ரூபாய் 20000!! கொட்டியான் ஒருவயிரும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு 10000, 20000 வயிர்போலும்!

இந்த 20 கோடியைக் கொண்டுசர்க்கார் சிப்பந்திகளுக்கு அவர்கள் வாழ்விற்கு வேண்டியமட்டும் வினியோகிப்போமாகில் இந்த பதினுயிரம் மேல் அதிகாரிகளைச் சேர்த்து, இன்னும் 20 லக்ஷ மக்கள் உழைத்து ஜீவிக்க வினியோகிக்கலாமன்றே! சர்க்கார் கடமடங்களென்று அபரிமிதமான பணத்தை வருஷா வருஷம் செலவிட்டு வருகின்றார்கள். ஆனல் இந்தக் கட்டடங்களில்இரவில் ஒளவ்ல் நடமாடுகின்றன. இவ்விதமாக அராஜகிய செலவுகளுக்கும் மக்கள் உழைத்த உழைப்பால் வந்த செல்வம் செலவிடப்பட்டு வருகின்றது. உலக அரசுக: இந்த வீணே செலவிடப்படும் செல்வத்தை, உழைத்தவன் உண்டு வாழ செலவிடப்படுமேயாகில் உலகமே 'புண்ணிய' பூமி எனப்படும்! [If all the wastes incurred by the world Government were used for the necessaries of life, it will bring heaven on earth] வியர்த்தமாகப் போகும் செல்வங்கள், யாவும், நல்வாழ்விற்கு உபயோகப்படுமாயின், 'வானுலகத்தை' இந்த மண்ணின் மேல் காணலாமே! இதனை யார் கவனிக்கின்றார்கள்? சர்க்கார்கள் செய்யும் படாடோபங்களைக் கண்டு, மக்கள் மயங்கி வருகின்றார்களே ஒழிய, தங்களுடைய குழந்தைகளுக்கு போதுமான பால் இருக்கின்றதா என்று சிந்திப்பாரில்லை. இத்தியாதி காரணங்களால், தற்கால வல்லரசுகள், வேலையில்லாத கோடி கோடி மக்களைக்கண்டு யாதொன்றும் மே தோன்றுமல் திகைத்து நிற்கின்றனர். உலக நெருக்கடியைப் போக்க, அரசுகள் செய்யும் முயற்சியினைக்கண்டு, ரஷிய தேசத்து ஒவ்வொரு சிறுவனும் கைக்கின்றனனும்! நோக மூக்கைத்தொடுவதை விட்டுவிட்டு, 'பரோபகார' அரசுகள், தலையைசுற்றி மூக்கைத்தொட்டுப்-பார்க்க ஆரம்பித்திருக்கின்றன!

ரோஜர் முத்தையா

The Land Lords Vain Efforts

நிலச் சுவான்களின் வியர்த்த முயற்சி.

நிலச் சுவான்கள் தங்களுக்கு நிலம் சொந்தம் என்ற கற்பிதத்தைக்கொண்டு, நிலத்தீர்வை என்றும்; வீட்டுவாடகை என்றும் மக்களிடமிருந்து வசூலித்து வருகின்றனர். இவ்விதமாக வசூலித்து வரும் செல்வம் 1000 கோடிக்கு மேலாகும். உழைப்பின் பயனுய் வந்த இந்த திரண்ட செல்வத்தை தன்னுடைய சொத்து இன்னதென அறியாத நிலச்சுவானும் அவனுடைய ஏழேழு தலைமுறையும் தங்களுடைய ஒரு விரலேயேனும் வேலை செய்யவிடாமல், கள்ளுக்கும் சுள்ளுக்கும், தாசிக்கும், வேசிக்கும் மற்றும் பலவித ஆடம்பரங்களுக்கும் வெட்கமின்றி (Shameless) செலவழித்து பலர் கடன் கொடுக்க முடியாது இன்சால் வென்டாக (Insolvent) ஆகின்றார்கள். தற்கால முதலாளி நிட்டத்தின்படி The world capitalist system இந்த நிலச் சுவான்களுடைய செல்வ முழுமையும் இவர்களே மாபெரும் ஆழியில் கொட்டினலும் கேட்பாரில்லை. தடுப்பாருமில்லை. ஒரு இந்திய முதலாளி, 30 லக்ஷ ரூபாயுக்கு ஒரு டந்தயக் குதிரையை வாங்கி அதன் கால் இறுதி பிசகியபடியால் 3000 ரூபாய்க்கு விற்று ஒழித்தானும்.

மத ஸ்தாபனங்களில் புகுந்து தொடக்கும் செல்வங்களை கணக்கிடவும் முடியுமோ! ஒரு கணக்கின்படி கோடிகோடியாகுமாம்! இந்த செல்வம் முழுமையும், சண்டையில் மாண்ட, அல்லது, சென்ற மக்களாலும், விதவைகளாலும், போப்புகளின் கட்டளையாலும் Popal Bulls லாகிரி வர்த்தகர்களாலும், மூட விதவைகளாலும், மதவெறிகொண்டவர்களாலும் தானமிடப்பட்ட செல்வமாகும். இந்த செல்வத்தை நெற்றி வியர்வை நிலத்தில் பட சம்பாதித்த தொழிலாளிக்கு உதவாமல், சோம்பேரி மதஸ்தகளுக்கும், மௌலானுச்சளுக்கும், கோவில் பெருச்சாளிகளாகிய குருமாராகளுக்கும், தேருக்கும் திருவிழாவிற்கும், வெடிகுண்டிற்கும் மத்தாப்புக்கும், சரியாகும்படி செலவிடப்படுகின்றன. இவ்வளவு செல்வமும் மக்களின் வயிற்றிற்குதவாமல், வீணே என் செலவிடப்படுகிறதென்று கேட்டால், அவ்வித வீண் செலவுகள் இல்லாமற்போனுல் மக்கள் கடவுள் அருளைப் பெறமாட்டார்களாம்! இந்த வேடிக்கை ஆடம்பரங்களை எத்த கடவுள் கண் திறந்து பார்த்து ஆனந்திக்கிறது என்று கேட்டபார் யாருமில்லை!

அரசியல் கட்சிகளின் அபாசம்

The absurdity of political parties.

நமது நாட்டில் மித வாதிகளென்றும் The Liberals, சுதந்திர வாதிகளென்றும் The independents காங்கிரஸ் சுயராஜ்ய கட்சி என்றும், தேசிய சுயராஜ்ய கட்சி என்றும், தேசிய கட்சி என்றும் [The nationalists] சனுதன கட்சிகளென்றும் [The Sanathanists] ஹிந்துமகாசபையாரும் [The Hindu Mahajana Saba] The Muslim party-The National Muslim party-The Sikhs--The Harijans--The Angolo Indians and what not! இந்த கட்சிகள் வேண்டுமென்ற சீர்திருத்தங்களை படிக்கும் காலை ஐந்து புலவர்கள் கதை ஒன்று நமதுளுபகத்திற்குவருகிறது. தான் போடும் தாளத்திற்கு தக்கபடி உலை கொதிக்கவில்லை என்று, தயிர்ப்பானையை தடிகொண்டு ஜாடினன் மற்றொருவன். பதார்த்தம் வாங்கப்போன இன்னெருவன் இத் வாய்வு, அது பித்தம், இது சூடு என்று கூறிவிட்டு வீட்டிற்கு வெறுங்கையுடன் வந்து சேர்ந்தான். மனிதர் எதிர்கால வாழ்க்கையை குறிப்பிடும் ஜோசியன் இலை பறிக்க மறத்தின்மேல் ஏறி இலைபரிக்கப் போகும்போது கெவுளிசத்தவே, இலை பறிக்காமல் இறங்கிக்கொணடிருந்தான். அந்த சமயத்தில் மற்றொரு கெவுளிசத்தவே, ஏராமலும் இறங்காமலும் மரத்தை தாவிப்பிடித்தவாரே நின்றுன். கடைசியாக நெய் வாங்கப்போன தர்க்க சாஸ்திரி, தொன்னையில் நெய் வாங்கிக்கொண்டு வரும்போது தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்கு தொன்னை ஆதாரமா என்று பரீக்ஷித்துப் பார்க்கதொன்னையிலிருந்து நெய்முழுவும், நெய்க்கு தொன்னை தான் ஆதாரமென்று திருப்திகொண்டு வெறுங்கையுடன் வீடு திரும்பினன். இவர்களைப் போலவே நமது நாட்டு அரசியல் கட்சியினர்களும் வட்டமேஜையிலிருந்து இறங்கி வெறும் சொல்லுடன் நமது நாட்டிற்கு திரும்பினர். இந்த கக்ஷியினர் ஒருவரேனும், நமது தேசம் அடைந்திருக்கும் நெருக்கடியிலிருந்து மீள ஒரு வழியாகிலும் காட்டவில்லை Not one was able to point out one effective wayto get out of this dreadful system இந்த கட்சியைச் சேர்ந்த பெரும் பான்மையோர் பழைய காலத்து அரசாங்க முறையை தழுவி நிற்பவர்கள். தற்கால பொருளாதார ஞானத்தை அறியாதவர்கள்.பட்டத்திற்கும் பதவிக்கும் வேட்டையாடுகின்றவர்கள். தங்களுக்கும், தங்கள் கூட்டத்தினர்களுக்கும், அரசியல் ஆதிக்கம் வந்தால் போதும், மற்றபடி கோடி உயர்ந்தென்ன தென்கோடி தாழ்ந்தென்ன என்ற மனப்பான்மை உடையவர்கள்.

[Every one of these parties are clamouring for political power alone] ஒவ்வொருவரும் அரசியல் ஆதிக்கத்தைக் கொள்ளோயாடுகின்றனர். தங்கள் தொப்பை நிரம்பினுல் போதும், பிறர் எக்கேடு கேட்டால் நமக்கென்ன என்பவர்கள். ஆனல் தேர்தல் காலங்களில், அதைச் செய்வோம் இதைச்செய்வோம் என்று கூச்சல் போடுவதே ஒழிய மற்றபடி எதையும் சாதிக்கப்போவதில்லை. தெளன்சில் தங்கள் பிரதிநிதிகள்—சட்டதிட்டங்கள்—பட்ஜெட்டுகள்—தீர்மானங்கள்—கேள்விகள்—தங்களுக்கு சேரவேண்டியபடி இவைகளுடன் நிற்கின்றவர்கள். ஆனல் எவ்விதம் நெருக்கடியைப் போக்கலாம், எவ்விதம் தேச முழுமையும் சுகித்துவாழச் செய்யலாம், மக்கள் உண்டு உடுத்து களிக்கச் செய்வதெப்படி—வேலை இல்லாமையைப் போக்குவதெப்படி, இத்யாதி விஷயங்களைப்பற்றி எவ்விதகவலையும் கொள்ளாதவர்கள். இதன் விஷயமாக யாதொரு வழியுங்கண்டுபிடிக்க முயற்சிக்காதவர்கள். வழி இருப்பதாகச் சொல்லியும் கேட்காதவர்கள். அதன்படி நடக்க முடியாதவர்கள். இவ்விதகூட்டத்தார்தான், உலக மக்களின் வாழ்வை ஆண்டு வருகின்றனர். எவ்விதம் உலகப் பசிப்பிணி தீரியும்? நாட்டின் தரித்திரம் எவ்விதம் ஒழியும்? மக்கள் வாழ்வு சிறைவதெப்படி? சாந்தமும் சமாதானமும் நிலவுவதெவ்விதம்?

சகலருக்கும் அவரவர்களுக்குத் தகுந்த வேலையை ஒழுங்குபடுத்தும் வரையிலும் [Organization of Universal Labour] அந்தந்த உழைப்பிற்கேற்ற வாறு அவனவன் வாழ்விற்கு போதுமான வசதிகள் [to each man according to his life's needs] திட்டமுண்டாக்கும் வரையில், அவனவன் இஷ்டப்படி தாறுமாறுக உழைப்பின் பயனை வியர்த்தமாக்குவதை நிறுத்தும் வரையிலும், உலக மக்கள் அறியாமை நீங்கி, தெளிவடையும் வரையிலும், எவ்வித அரசாங்க உபாயங்களும் பயன்படாதென அறிக. இத்தியாதி முக்கிய வாழ்வின் விஷ

தூர்வினியோகமும்
ஒழுங்கற்ற போட்டியும் ஒழிக.

யங்களே கிரமப்படுத்தப்படும் வரையிலும், தேச மக்களுடைய வாழ்வு, காட்மிராண்டி கால முதல் காளது வரை [world would countinue to be uncertain and precarious] நிச்சயமில்லாமல் தான் இருந்துவரும். நமது சத்திய மூர்த்தி, இருக்கும் முதலாளி திட்டத்தில் 10 வருஷ திட்டம், 5 வருஷ திட்டம் என்று சொல்லிக் கொண்டு வருகின்றார். பயிரை மேயும் வேலியை சுற்றி போட்டுக்கொண்டு, பயிரைக்காப்பதற்கு என்ன சட்டம் செய்ய முடியும்! விளையும் பயிரையும், செய்யும் பொருளையும், அவனவன் மனம் போன போக்கின்படி அழித்து நாசப்படுத்தி, விலையை உயர்த்தி, விளையவொட்டாமலும்தடுத்து பலவித தூர்வினியோகங்கள் செய்து சிற்சில சொந்தக்காரர்களொன்று வழங்கும் சிலரே தங்கள் செப்பப்படுத்திக் கொண்டு இருப்பதால் என்ன திட்டம் பலிக்கும். ஆதலின் அவனவன் உழைப்பின் பயன் அவனவனுக்கு உதவினால் மாத்திரம் சரி சமத்துவ வாழ்வு எப்படியே ஒழிய, நடந்தேறி வரும் பண்டை கால ஆட்சி முறையில் யாதொன்றும் நடவா.

வழிபடும் மார்க்கம்.

முதலாவது, நிலம், நீர், அதில் விளையும் பொருள்கள், பொதுவென ப்பாவிக்கப்படல்வேண்டும். உலக மக்களில் யாரும் நிலத்தையும் நீரையும் தாங்கள் பிறக்கும் போதும் கொண்டுவந்தில்லை. இறக்கும் போதும் கொண்டுபோவதுமில்லை. அவைகளை உண்டாக்கியவர்கள் யாருமில்லை உலகில் மனிதன் உற்பத்தியாவதற்கு முந்தியே, நிலமும் நீரும் இருந்து வந்திருக்கின்றன. ஆனால் ஆயிரம் வருஷங்களுக்கு முற்றான், அரசனும் அமைச்சனும்உலகில்தோன்றி நிலத்தையும் நீரையும் வசூத்துக் கொண்டு, அவர்கள் மூலமாக சொந்தக்காரர்களென்ற நிலச்சுவான்களும் தோன்றினர்.

(1) உலகோற்பத்தி முறையில் நிலமும் நீரும் பொது வுடமையாக முதலில் செய்ய வேண்டும். (2) நிலத்திலும் நீரிலும் உண்டாகும் தானியங்களும் செல்வங்களும் சிலரால் அபகரிக்கப்படுவது போய் உழைப்பவர் சகலருக்கும் போதுமான அளவு, வினியோகிக்கப்படல் வேண்டும். (3) தொழிற்சாலைகள் எல்லா மக்களுக்கும் பொதுவாக ஏற்பட வேண்டும். தொழிற்சாலைகளில் கொண்டு வரப்பட்ட இயற்கைப் பொருள்களாகிய தானியங்கள், லோகங்கள், மரங்கள் இம் மூன்றால் எல்லாவித பொருள் களும் செய்யப்படுகின்றன. அந்தப் பொருள்கள் எதுவும் தானே உலகப் பொருளாக மாற முடியாது மனிதன் கையால் தான் செய்து தீரவேண்டும். உலகத்தில் செய்யப்படும் எல்லாப் பொருள்களுக்கும் அதனதன் உருவத்தையும், உபயோகத்தையும் உண்டாக்குகிறவன் அவைகளைச் செய்கின்றவனே. அதற்கும், அந்த உபயோகத்திற்கும் உரிய பயன், அதைச்செய்த வனைத்தான் சேரவேண்டும். ஆகலின், தொழிற்சாலைகளில் உண்டாகும் லாபமனைத்தும் அதாவது சர்ப்ளஸ் (Sur plus) என்று ஆங்கிலத்தில் வழங்கும் லாபம் சரி சமத்துவமாக யாவருக்கும் விநியோகிக்கப்பட வேண்டும். (4) மனித வாழ்க்கையின் போக்கில் அபரி மிதமான வசதிகள் வேண்டி வந்த படியால் இந்த வசதிகளை சொந்த மாக்கியவர்கள் வர்த்தகர்களென்று வழங்கப்பட்டு வருகின்றார்கள். இவர்கள் இஷ்டப்படி இத்யாதி வசதிகளை உண்டாக்கி வருவதால், உலகில் பலருக்கு வாழ்விற்கு வேண்டிய வசதிகள் இல்லாமலும் The amenities of life சிலருக்கு சுகபோகங்களைக் கொடுக்கும் வஸ்துக்கள் மாத்திரம் உண்டாக்கப்பட்டும் வருகின்றது. ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக்கொண்டு, (Competition) விலையை உயர்த்துவதும் விலையைத் தாழ்த்துவதுமாக செய்து வருகின்ற படியால், உலக வசதிகள் தாறுமாறாக விநியோகிக்கப்படுகின்றன விளம்பர மூலமாக Advertisement மக்கள் ஏமாந்து போகின்றனர். உபயோகமற்ற வஸ்துக்களை வாங்க நேரிடுகின்றது. அந்தந்த பொருளைச் செய்தவன், மக்களுக்கு வேண்டிய மட்டும் செய்யாமல், தனது லாபத்திற்காக அபரி மிதமாக செய்து விடுகின்றான். அதனால் வஸ்துக்கள் விலை படாமையால் மக்கள் உழைப்பு வீணாய் விடுகின்றது. இவ்விதம் வர்த்தகத்திலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகத்திற் குறிய பொருள்கள், செய்யப்படாமல் லாபத்தைக் கொடுக்கும் வஸ்துக்கள் மாத்திரம் தான்செய்யப்படுகின்றன. இவ்வி Universal competition கட்டு திட்ட மில்லாத போட்டியால் முக்கிய பொருள்கள் செய்யாமற் போகின்றன. இந்தப்பித்தம் பிடித்த போட்டியால் தான் [Mad competition] உலகிலும் நாட்டிலும் பல கோடி மக்களுக்கு வேலை இல்லாமற் போகின்றது. தற்கால உலக நெருக்கடியையும் இந்த ஒழுங்கற்ற போட்டியாலென அறிக. இந்த Mad competition னால், உலகில் உண்டாகும் கேட்டையும், நெருக்கடியையும், விபரமாக தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் "உலக நெருக்கடியும் தொழிலாளர் தயாரும்" என்ற சிறு புஸ்தகத்தை வாசித்தறியலாம்.

வர்த்தகப்பொருள் இல்லாமல் மனித வாழ்க்கை நடவா. ஆனால் அதில் விளையும் லாபமின்றி யாதொரு சுவலையின்றி யாரும் உயிர்வாழலாம். மனித குலத்திற்கு கோடரிக்காம்பாய் உள்ளது இந்தலாபமே. வர்த்தகப் பொருள்கள் உண்டாக்க வேண்டியது, உபயோகத்திற்கேயன்றி லாபம் சம்பாதிப்பதற்கல்ல. மனித குரங்குகள் மழைகாலங்களிலும்இராக்காலங்களிலும் தழையைப் போர்த்திக் கொள்கின்றன. இந்த தழையை ஒன்றுக் கொன்று விற்பதில்லை; வாங்குவதுமில்லை. அதைப் போலவே ஏல்லா உலக வர்த்தகப் பொருள்களும், ஒழுங்காக செய்து வருவோமேயானால், லாபமில்லாமல், ஒரு பொருளுக்கு இன்னொருபொருள் மாற்றிக்கொள்ளலாம் பண்ட மாற்றமுறையாத சந்தர்ப்பங்களில், செய்யும் வேலைத்தைக்கொண்டும், அதில் செலவிடப்படும் சாமர்த்தியத்தைக் கொண்டும் அந்த பொருள்களுக்கு விலை மதிப்பு ஏற்படுத்தலாம். இந்த பொருள்கள் செய்யவேண்டியதற்கு செய் விலையோடு லாபமும் வைக்கவேண்டி இருந்தாலும் இந்த லாபம், பொதுமக்களுக்கே உபயோகப்படுத்தி வரவேண்டும். தனிப்பட்ட வர்த்தகத்தை ஒழித்து பொதுப்படையான வர்த்தக மூலமாக விளைபொருளும், செய்பொருளும் வினியோப பதிமாயின், மகராஜனென்றும், ஏழையென்றும், முதலாளி என்றும், தொழிலாளி என்றும், நிலச்சுவான் என்றும், நிலமில்லாதவனென்றும் விற்பவனென்றும் வாங்குவோனென்றும், லாபம் கொடுக்கும் பொருள்களென்றும், லாபம் கொடாத பொருள்களென்றும், உலகமக்களிலும் வஸ்துக்களிலும் வித்தியாசமில்லாமற போகும். இந்த பேதநீதியசார விதீயாசம் ஒழிந்தாலொழிய உலகம் சீர்படாது. போக்குவரத்து சௌகரியங்களும் Transport services) ரெயில்களும், கப்பல்களும், படகுகளும், டாக்சிகளும், டிராம்வேக்களும், எரோப்பிளேன்களும், சிற்சிலரே ஆண்டுவருகின்றனர். அவைகளின் மூலமாக வரும் பெரும்பான்மை லாபத்தை அவர்களே அடைகின்றார்கள். ஆனால் அவைகளைப் படைத்தவர்கள் ஒருவனுயிருப்பினும், அல்லது 1000, 10,000பேர் சேர்ந்த ஓர் கம்பெனியாய் இருப்பினும், அவைகளை ஓட்டும் உழைப்பில் யாரும் சேர்ந்தவர்களல்ல. ஓட்டுவது ஒருவனும், அதன் பயனை ஓட்டாதவன் அனுபவிப்பது என்னதர்மம்! என்ன நியாயம்! எனவே சோஷலிசத்தில், எல்லாபோக்குவரத்து ஸ்தாபனங்களும் பொதுவாக நடத்தப்படல்வேண்டும். அவை வழங்கப்படுகின்றவர்கள், இவர்களது வாழ்க்கையின் மூலம் விளையும்பயன், சகல மக்களுக்கும் சமமாக முக்கியத்தாகும் என்னென்றால், ஒருவனுக்கு ஒரு வசதி அதிகமாக கொடுத்தால், அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் நஷ்டம் அதிகமாகும். உதாரணமாக ஒருவனுக்கு ஒரு மோட்டார் வண்டி அதிகமாக கொடுத்தால், அதனால் ஒரு குதிரை வண்டி குறைவாகும். ஒரு குதிரை வண்டி குறைவதால் ஒரு குதிரை, ஒரு வண்டிக்காரன், ஒரு சாட்டை, ஒரு கடிவாளம், ஒரு சேணம், ஒரு லாயம், ஒரு தொழுவம், ஒரு கொட்டகை, ஒரு வைக்கோல் போர், ஒரு கொள்ளு மூட்டை, ஒரு தவிடு மூட்டை, ஒரு புல்லுக்கட்டு, ஒரு சாணி, ஒரு சாணி எரு, ஒரு சாணி வரட்டி, ஒரு சாணி விறகு, ஒரு சாணி கரி, ஒரு சாணி நிலக்கரி, ஒரு சாணி பெட்ரோல், ஒரு சாணி மண்ணெண்ணெய், ஒரு சாணி கிரீஸ், ஒரு சாணி ஆயில், ஒரு சாணி பெயிண்ட், ஒரு சாணி வார்னிஷ், ஒரு சாணி ரப்பர், ஒரு சாணி தோல், ஒரு சாணி துணி, ஒரு சாணி நூல், ஒரு சாணி பஞ்சு, ஒரு சாணி விதை, ஒரு சாணி உரம், ஒரு சாணி மண், ஒரு சாணி நீர், ஒரு சாணி காற்று, ஒரு சாணி வெளிச்சம், ஒரு சாணி இடம், ஒரு சாணி நேரம், ஒரு சாணி உழைப்பு, ஒரு சாணி சக்தி, ஒரு சாணி ஆயுள், ஒரு சாணி வாழ்க்கை, ஒரு சாணி மரணம், ஒரு சாணி பிறப்பு, ஒரு சாணி இறப்பு,

சட்டசபைப் பிரவேசம் அவசியம்.

உலகயுத்தம் எற்பட்டே தீரும்.

தேசியம் வேண்டாம்.

னில் தனிவுடமையை பூர்ணமாக அழித்துவிடலாகாது. இருந்துவரும் மகாராஜர்களும், முதலாளிகளும், தனவந்தரும், நிலச்சுவான்களும் இருந்து வந்தால் பாதகமில்லை என்பார்கள். ஆனால் இவர்கள் அடைந்துவரும் பெயலாபத்திலிருந்து கிஞ்சித்து தொழிலாளர் நிலைமையை உயர்த்தவேண்டுமென்பார்கள். தொழிலாளி நிலைமையோ அரசியல் கட்டுதிட்டங்களுக்கு அடங்கவேண்டும். தொழிலாளி ச்சங்கங்கள், முதலாளி மூபற்கிகள் தொழிலாளி சுதந்திரங்கள் ஆட்சி நடத்துவோர் அனுமதியின்றி எதுவும் ஏற்படாது. இந்த ஆட்சி (Corporate ஆட்சி] அதாவது கூட்டுறவு ஆட்சி என்பார்கள். இந்த ஆட்சியில் முதலாளிகளும், தொழிலாளிகளும் சர்வாதிகாரிக்கு உப்படவேண்டும். ஆனால் இந்த கார்பொரேட் ஆட்சியில் முக்கிய குறை என்னவெனில் சிறுபான்மை முதலாளிகளை நிலைக்கவைத்துப் பெரும்பான்மைத் தொழிலாளிகளுக்கு யாதொரு சமத்துவமும், சுதந்திரமும் இல்லாமற்போகும். இத்தச் சித்தாந்தங்கள் அந்த தேசியத்தை அடிப் படையாகக் கொண்டது. இது ஒன்றே போதும், இந்த சித்தாந்தங்களை அறுவெறுக்க, தேசியம் எங்கு முதிர்ச்சி அடைகின்றதோ, அது போருக்கும், சண்டைக்கும், அகிலதேசக் கலகத்திற்கும் அஸ்திவாரமென அறிக. தனது தேசம், தனது நாடு என்றதனால் ஒவ்வொரு தேசமும் மற்ற தேசத்தோடு போட்டி போட நேரிடுகின்றது. இந்தத் திட்டங்களில் பகுத்தறிவிற்கு இடமில்லை.

நேற்று ஜெர்மனியில் ஸ்தாபிக்கப்பட்ட நாசி ஆட்சியில் பகுத்தறிவுச் சங்கங்கள் யாவும் அழிக்கப்பட்டு, அவைகளின் சொத்துகள் யாவும் பரிமுதலாக்கப்பட்டன. இந்தத் திட்டங்களில் மூட மதப் பழக்க ஒழுக்கங்களை ஒழிக்கமுடியாது. பொதுவாக இந்த பாசிஸ்ட், நாசிஸ்ட்திட்டங்களை தேசியத்தை அடிப்படையாகக்கொண்ட முதலாளித் திட்டமென்றே கூறலாம். உலக சமாதானத்திற்கு இத் திட்டங்களால் அபாயம் நேரிட்டுக்கொண்டே வரும். இதற்குத் திருஷ்டாந்திரம் வேண்டுமானால் இந்தப் பாசிஸ்ட் திட்டத்திற்கனுகூலமான ஆட்சிகள் பல, சோவியத் ரஷ்யர்கள் செய்துவரும் சர்வதேச சமாதான உடன்படிக்கையில் சேர மறுத்துவிட்டாகள். இந்தத் திட்டங்களை (Post war phenomena) என்று சொல்வார்கள். அதாவது மகாயுத்தத்திற்குப் பின் உண்டான தோற்றங்கள். இந்தத் தோற்றங்கள் தோன்றுவதற்கு முதற்காரணம் என்னவெனில், ரஷ்யாவில் சோஷலிசம் தழைத்தோங்கி வருவதேயாகும். எங்கே சமதர்மம் தங்கள் ஊரிலும் நிலைத்துவிடப் போகுமென்று பயந்து சமதர்ம விஷயமாக அதிர்ச்சி செய்துவரும் தொழிலாளர்களை அடக்கி நசுக்கத் தோன்றிய தோற்றங்களாகும். அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று விளம்பரப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றதே தவிர யதார்த்தத்தில் யாரும் இந்தத் திட்டங்கள் மூலமாகச் சுகப்பட்டதாகத் தோன்றவில்லை. சிறுபான்மையாகிய இந்தத் திட்டங்கள் மூலமாக சுகம் ஏற்பட்டால் அது தற்காலிகமென்று உரைக்கவேண்டும். உலகில் சாஸ்வத அமைதி, செல்வாக்கு, சுதந்திரம் சமத்துவம் ஏற்படவேண்டுமானால், முதலாளிகளின் பொருளாதார திட்டம் மாறி சமதர்மத் திட்டமாக மாறவேண்டும். உலகம் இம் மாறுதலையையும்வரை தேசத்திற்குத் தேசம், நாட்டிற்கு நாடு கூட்டத்தாருக்கு கூட்டத்தார் குழப்பத்திலேயே இருந்துவருவார்கள்.

முதலாளித் திட்டத்தை மாற்றி சமதர்மத் திட்டத்தை ஸ்தாபிப்பதற்குக் கருவிகள் என்னவேண்டும்?

(1) சமதர்மம் இன்னதென்று நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும் (2) பொதுமக்கள் [The Public] சமதர்மத்தை நிலைக்கச் செய்யக் கோரவேண்டும். (3) சமதர்மத்தால்தான் உலகம் சீரழிவிலிருந்து மீளவைக்க முடியுமென்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு பூர்ணமாயிருக்கவேண்டும்.

பொதுமக்கள் தங்களுக்கு வேண்டுவதைக் கோறி அதற்குவேண்டிய உழைப்பை எடுத்துக்கொள்ளாவிட்டால் இட்டாலியிலும், ஜெர்மனியிலும் சமதர்மச் சங்கங்கள் அழிந்ததுபோல் நமது நாட்டிலும் அழிந்துவிடும். எல்லாவிதப் புரட்சியும் பொதுமக்கள் விருப்பினால்தான் கைகூடிவரும். அசிரத்தையால் எந்தக் காரியமும் கைகூடிவராது. இதை பொதுமக்கள் பெறவேண்டியஞானம்.

சோஷலிஸ்டு சங்கங்கள் செய்யவேண்டிய வேலை.

தற்போது முதலாளிகள் அடைந்துள்ள நிலைமையில், பலாத்காரத்தால் சமதர்மத்தை ஸ்தாபிக்க முடியாதென்று எண்ணுகின்றோம். பொதுமக்கள் எதை விரும்பினாலும், அது வெற்றிபெற முடியுமாதலால் நமது சங்கங்கள் பொதுமக்களுடைய மனதைக் கவரவேண்டும். அதற்குப் பிரசாரந்தான் தகுதியான கருவி. சமதர்ம ஞானத்தைப் பொதுமேடைகளிலிருந்து தெரிவிப்பதுடன் சட்டசபைகளிலும், மற்றும் பல தேசிய ஸ்தாபனங்களிலும் நுழைந்து பொதுமக்களிடம் நெருங்கவேண்டும். சட்ட சபைகளாயினும், காங்கிரஸ் சபைகளாயினும் மிதவாத சபைகளாயினும், மகமதிய சபைகளாயினும் ஆங்காங்கு நுழைந்து சிங்கங்களைப்போல் சமதர்மத்தைக் கர்ஜிக்கவேண்டும். ஆனால் சமயோசிதவாதிகளும், வழவழப்புக்காரர்களும், வெறும் சீர்திருத்தக்காரர்களும், மனம் உற்சாகமில்லாதவர்களும் இந்த வேலைக்குப் பாத்திரர்களாகார். (Every man tastes death but once) ஒவ்வொரு மனிதனும் ஒரே தடவைதான் சாகின்றான் என்ற அனுபவத்தை உணர்ந்தவர்கள்தான் சமதர்மக் கிளர்ச்சியில் இறங்குவார்கள். (Cowards die many times bnt the valient dies but once) கோழைகள் பலமுறை சாகலாம். வீரன் ஒரேதடவைதான் சாகின்றான். இம் மாபெரும் அனுபவத்தை சிந்தித்தவர்கள்தான் சமதர்மிகளாகமுடியும். இன்னொரு விஷயத்தையும் நமது சமதர்ம சபைகள் தெரிந்துகொள்ளவேண்டும். சட்டசபைகளால் சமதர்மம் நாட்டில் ஸ்தாபிக்கமுடியாது. ஆனால் அவ்விடத்திலிருந்து செய்யும் பிரசாரங்கள் பல கோடிமக்களுக்கு சுலபத்தில்எட்டும்.

சமதர்ம எதிரிகள் சமதர்மிகளை அடக்கவொட்டாமலும் செய்யமுடியும். ஆனால் ஜெர்மன் பார்லிமெண்டிலும் இட்டாலி பார்லிமெண்டிலும் நிறைந்திருந்த சமதர்மிகள் என்தோல்வி அடைந்தார்களென்ற கேட்கலாம். அவ்விடங்களில் சமதர்மிகளுக்கு போதுமான சேனை சேவக பலமும் பொதுமக்கள் ஆதரவும் இல்லாமற் போய் விட்டதென உணர்க. ஒரு சமயம், வரும் சமதர்ம உலகமெங்கும் தழைத்தோங்கும் முதலாளி அரசுகள், அவர்களுக்குண்டான முரண்பாடுகளால் ஒருவரை ஒருவர் எதிர்த்துபேர் புரியநேரிடும். இதனை சரித்திர அவசிய மென்பார்கள் It is an historical ncess---ity. யானை கொழுத்தால் தன் தலைமேல் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போல் முதலாளிகள் தங்கள் குழியை தாங்களே வெட்டிக்கொள்வார்கள். அகிலத்தொழிலாளர்களால் உலகில் போர்நடவா. இதற்கு திருஷ்டாந்தம் வேண்டுமானால், ரஷ்ய தேசஅந்திய நாட்டு விவகாரங்களைப்பற்றி படித்தறிந்து கொள்ளலாம். என்? முதலாளி போரை கோறுவானேன்? தொழிலாளி சமாதானத்தை விரும்புவானேன்? தொழிலாளி உணவுக்கு உழைக்கின்றான். முதலாளி பணத்திற்கு உழைக்கின்னான். தேசியம் இருக்கும் வரை உலகப்போர்கள் நடந்தே வரும். நாடுகரங்கள் அழிந்தே வரும். கொள்ளை நோய் அதிகரித்தே வரும் மாந்தரும் மக்களும் இறந்தே வருவார்கள். உலகமெங்கும் தீப்பற்றி எரியும் இந்த Universal catastrophe யால் முதலாளி அரசாங்கதார்களால் உயிரையும் பொருளையும் காப்பதற்கு முடியாமற் போகும். (That will be the great occasion for the socialists to rise and deliver the goods to the starving and devasted people and restore world order) எந்தக் காலத்தில் போர்களில் வாடி வதங்கும் மக்களுக்கு வல்லரசுகள் உண்ணஉணவும், உடுக்க ஆடையும் தங்கவீடும், அளிக்க முடியாமற் போகின்றதோ, அந்த சமயந்தான் சமதர்மிகள் எழுந்து பகியால் வருந்தும் மக்களுக்கு உணவளித்து குழப்பத்திலிருந்து ஒழுங்கை நிலை நிறுத்துங்காலம். இது வெகுகாள் பிடிக்குமென்று எண்ணுதீர்கள். நேற்று நடந்த மகா முதலாளி யுத்தத்தில் மூன்று வல்லரசு ஆட்சிகளும் மூன்று சிற்றரசு ஆட்சிகளும் தரையில் உருண்டன. இனி வரும் முதலாளி யுத்ததில் மீதி நிற்கும் வல்லரசுகளும் தரையில் உருளப்போகின்றன. நண்டு கொழுத்தால் வலையில் சும்மா இருக்காதென்பார்கள். முதலாளி கொழுத்தால் போரிடாமலிருக்க மாட்டான். அது அவனுடைய கடமையாகும். சமதர்மிகளே! அந்த சமயந்தான் உங்கள் சமயம். அதற்கு பாடுபடுவீர்களாக.

தோழர்களே! முதலாளிவர்க்கத்தினர்களுக்கு தலை மாட்டுக் கொள்ளியாக, பாசிஸ்ட்டுகளும் நாசிஸ்ட்டுகளும் தோன்றியுள்ளார். சமதர்ம தோழர்களே! உழைத்து வாருங்கள்.

தேவை.

நன்கு வேலை செய்யும் நிலையிலுள்ள டிரெடில், பிரஸ் முதலிய அச்சியந்திரங்கள் தேவை. அடியிற்கண்ட விலாசத்துக்குப் பூரா விவரங்களுடன் தெரிவிக்கக் கோறுகிறோம்.

செக்ரட்டரி,
சுயமரியாதை வாசிப்புசாலை,
கோட்டாறு
(S. Travancore)

ரோஜா முக்கையா

குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணு 0—4—0

கைவல்யம் அல்லது கீலக்கியானம்.

பொதுவுடமைத்தத்துவங்கள்.
விலை அணு 0—3—0.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதியா காண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணு. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இதன் விலை அணு 0—3—0

பங்கமும் அல்லது பார்ப்பனக்கொடுமை.
இதன் விலை அணு 0—4—0

மேலையோகூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணு 0—3—0

ஆகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணு 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.
விலை அணு 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?
இதன் விலை அணு 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணு 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?
விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.
விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.
விலை அணு. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணு 0—2—0.

கதர்-சூடாநம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணு 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது எனபதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரஸல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்து வைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணு 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு சோமூர் S. லட்சுமிரத்னபாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

கடவுள்.
(இங்கர்சாலின் சொற்பொழிவுகள்)

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய சேப்பருடன் இங்கர்சாலின் வாழ்நாளும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணு 5.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0



நடைபெறும் பந்தயத்தின்

பெயரும், தேதியும்.

டெர்பி

6—6—34.

முதல் பரிசு பெற்றவர்.


டெர்பி மியூட்சுவல் லாட்டரி கிளப்

ஜூமேக்காடைம்ஸ்.:- ஏப்ரல் 4-31.

கிரேண்ட் நேஷனல் குதிரைப்பந்தய லாட்டரியில் ஜூமேக்கா தேசவாசி முதல் பிரைஸ் டிக்கட்டைப் பெற்றான். கைஸ்ஹில்லில் வசிக்கும் C. A. டேய்லருக்குக் கிடைத்தது. முதல் பிரைஸ் டவுன் **6800**.

சுவிட்ஜர்லாந்துக்கு பக்கத்திலுள்ள லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டின் லிசென்ஸ் பெற்று கவர்ன்மெண்ட் பிரதிநிதி, போலீஸ் இவர்கள் மேற்பார்வையில் பத்திரிகை பிரதிநிதிகள், பொது ஜனங்கள் முதலியவர்கள் முன்னிலையில் நடைபெறுவது. 13-வருஷமாக நடைபெறுகிறது. வருடத்தில் மும்முறை மார்ச்சு, ஜூன், அக்டோபர் அல்லது நவம்பர் ஆகிய மாதங்களில் நடைபெறுகிறது.

ஒவ்வொரு சந்தாதாரருக்கும் டிக்கட் நம்பர் லிஸ்டு, கமிஷன் ஆபீஸ் ரசீது, டிராலிஸ்டு முதலியவை அனுப்பப்படும்.



டிக்கட்டிற்கு ரசீது கொடுக்கும் காட்சி.

சீட்டு எடுத்தல்.


நாங்கள் எமதுகவர்ன்மெண்டின் லிசென்ஸ் பெற்று மியூட்சுவல் கிளப் லிமிடெட் நடத்தும் ஒவ்வொரு லாட்டரியும் குலுக்கி எடுக்கப் படும்போது எமது பிரதிநிதி நேரில் இருந்து மேற்பார்த்து வருகிறார் என்பதையும், நடவடிக்கைகள் எந்த நிமிஷத்திலும் பொது ஜனங்கள் பரிசோதிக்க இடமுள்ளதாய், போலீஸ், பத்திரிகை பிரதிநிதிகள் முதலியவர்கள் முன் சரியாக தகுந்தபடி நடத்தப்படுத்துகிறதென்பதையும் இதன மூலம் தெரியப்படுத்துகிறோம்

லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டுக்காக,

[ஒப்பம்] FERDINAND NIGG,

காரியதரிசி.

வாடுஸ், 1930 செப்டம்பர் 3.



கூப்பன்களை ஆடிட்டர்களால் கணிக்கை பார்க்கும் காட்சி.

டிக்கட்டிற்கு ரசீது கொடுக்கும் காட்சி.

பிரைஸ் கொடுத்தல்.

நாங்கள் மியூட்சுவல் கிளப்லிமிடெட் வெளியிட்டுள்ள பிரைஸ்லிஸ்டுகள் எமது கவர்ன்மெண்ட் பிரதிநிதியால் சம்பந்தப்பட்ட லாட்டரிகளில் குறித்துக்கொள்ளப்பட்ட விபரங்களுடன் ஒத்துப்பார்த்ததில் சரியாக இருக்கிறதென்பதையும் பிரைஸ் தொகைகள் உரியவர்கட்கு அவர்கள் கேட்டமேல் கொடுக்கப்பட்டதற்கு உள்ள ஆதாரங்கள் எமக்கு காட்டப்பட்டன் என்பதையும் இதன மூலம் தெரியப்படுத்துகிறோம்.

லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டுக்காக,

[ஒப்பம்] FERDINAND NIGG,

காரியதரிசி.

வாடுஸ், 1930 செம்டம்பர் 3.

அதிகாரம் பெற்ற ஏஜண்டு:—

S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.

இந்தியாவிற்கு 1-வது, 2-வது, 3-வது பிரைஸ்கள் கிடைத்திருப்பதாகூட

எல்லா லிட்டங்களிலும் லிங்க ஏஜெண்டுகள் தேவை.

உண்மை விளக்கம் பிரிபடுத்தில் அச்சிடப்பட்டது. கா.ரா. ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.